janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakththolaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakththolaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 ▸ 2022 நவம்பர் 20 - நவம்பர் 26 ▸ விலை: ரூ.15 ▸ 16 பக்கங்கள் ▸ இதழ் 33




அரசியல், அமைப்பு நிலை பணிகளை முன்னெடுப்பீர்! நெல்லை சிவக்கட்டும்! ப 02



விடுதலைக்கு முதல் முழக்கமிட்ட மண்ணுக்கு வாருங்கள்! ப 07



அன்றாடங் காய்ச்சிகளைப் பாடிய பாணன் ப 15



# ஆளுநரை திரும்பப் பெறுக!

## டிசம்பர் 29-ல் ஆளுநர் மாளிகை முற்றுகை!

**தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை திரும்பப் பெறக் கோரி, டிசம்பர் 29 அன்று ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்துவது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

### மாநில நிர்வாகக்குழு கூட்டத்தில் தீர்மானம்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் கொண்ட கூட்டம் 14.11.2022 ஆம் தேதி சென்னையில் உள்ள மாநிலக் கட்சி அலுவலகத்தில் எம்.ஆறுமுகம் முன்னாள் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன் எம்.பி., எம்.செல்வராசு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ராமச்சந்திரன் (தளி), க.மாரிமுத்து (திருத்துறைப்பூண்டி) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஆளுநரை திரும்பப் பெறு! டிசம்பர் 29 ல் ஆளுநர் மாளிகை முற்றுகை!**

மோடியின் ஒன்றிய அரசு தான் நியமிக்கும் ஆளுநர்களைக் கொண்டு, எதிர்கட்சி மாநில அரசுகளுக்கு எதிராக ஒரு போட்டி அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உயிர் மூச்சு ஜனநாயகம் இங்கே ஒரு ஜனநாயக அரசை நிறுவுவதற்காகவே, ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக நமது முன்னோர்கள் ரத்தம் சிந்தி, அளப்பரிய தியாகம் செய்து விடுதலையை வென்றெடுத்தனர்.

இந்திய நாட்டுக்கு தலைவராக குடியரசுத் தலைவரையும், மாநில அரசுக்கு தலைவராக ஆளுநரையும் நமது அரசியல் அமைப்பு சட்டம் உருவாக்கித் தந்திருக்கிறது. ஆளுநர் என்பவர் களங்கமற்ற நேர்மையுடன், பாரபட்சம் இல்லாதவராக கடமை ஆற்ற வேண்டும்.

ஆளுநருக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் மீது விசுவாசமும், நம்பிக்கையும் இருந்தாக வேண்டும். அது இல்லாவிட்டால் அந்தப் பொறுப்பை வகிக்க அவர் பொருத்தமற்றவர் ஆவார். அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஆளுநர் ஒரு மாநில அரசின் பெயரளவிலான தலைவராக இருப்பதால் மாநில அரசின் அனைத்து நடவடிக்கைகளும் அவரது பெயரால் எடுக்கப்படுகிறது.

அவர் மாநிலத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர் அல்லர்; ஒன்றிய அரசால் நியமிக்கப்படுபவர் மட்டுமே! மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாநில அரசின் கருத்தியலையும், செயல்பாடுகளையும் ஆளுநர் எதிர்ப்பது அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது மட்டுமல்ல; ஜனநாயகத்திற்கு சாவு மணி அடிப்பதும் ஆகும்.

தமது பரந்த அனுபவத்தையும், ஆற்றலையும் ஒன்றிணைத்து நுணுக்கமாக அரசியலமைப்புச் சட்டத்தை எழுதிய அறிஞர்கள், பிற்காலத்தில் ஒரு ஆளுநர், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக் கொள்கைகளை எதிர்ப்பார்; அது இயற்றிய சட்டங்களுக்கு ஒப்புதல் தராமல் நிறைவேற்ற முடியாமல் தடுப்பார்; மதச்சார்பின்மைக்கு எதிராக நடப்பார் என்று கனவு கூட கண்டிருக்க மாட்டார்கள்.

தமிழ்நாடு சட்டப்பேரவை மாநில மக்களின் நலன்களை காக்கும் வகையில் 20 முக்கியமான சட்டங்களை இயற்றி யிருக்கிறது. இதில் உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலில் நிறைவேற்றப்பட்டுள்ள கூட்டுறவு சங்கங்களின் சட்டம், சாமானிய குடும்பங்களின் குழந்தைகளும் மருத்துவ படிப்பில் நுழைவதை உறுதிப்படுத்தும் வகையில் ‘நீட்’ விலக்குச் சட்டம் உள்ளிட்ட பல சட்டங்கள் ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பல மாதங்களாக அந்தச் சட்டங்களின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளார்.

பல்வேறு மதங்கள் மொழிகள் சாதிகளை கொண்ட மக்கள் இணைந்து வாழும் தமிழ்நாடு ஒரு நல்லிணக்க அமைதி பூங்காவாகும். ஆனால் ஆளுநர் மதச்சார்பின்மை கோட்பாட்டில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பதை பொது நிகழ்வுகளில் பேசி சமூகப் பிரிவினைகளைத் தூண்டி வருகிறார். சமூகத்தை துண்டாடக் கூடிய, அபாயகரமான, மத வெறியூட்டும் விஷயங்களை தொடர்ந்து அவர் பரப்புகிறார்.

இந்த மாநில மக்களின் மனதில் வெறுப்பை விதைத்து வகுப்புவாத அமைதியின்மையை தூண்டும் வகையில், திட்டமிட்டதாக அவரது பேச்சுகள் அமைந்துள்ளன. அண்மையில் உலகத்தின் மற்ற நாடுகளைப் போலவே இந்தியாவும் ஒரு மதம் சார்ந்த நாடுதான் என்று பேசினார். இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு நேர் விரோதமானதாகும். இந்தியா அதன் அரசியலமைப்புச் சாசனத்தையும் இதர சட்டங்களையும் சார்ந்துள்ளதே தவிர, எந்த மதத்தைச் சார்ந்தும் நிற்கவில்லை.

பிறப்பால் உயர்வு தாழ்வு, தீண்டாமை, பெண் அடிமைத்தனத்தைப் பேசும் சனாதன தர்மத்தை போற்றுவது, தமிழ் இலக்கியத்தின் ரத்தினமாகச் சுடர்விடும் திருக்குறளுக்கு சமயச் சாயம் பூசுவது, தமிழ்ப் பெருமிதத்துக்கும், திராவிடப் பாரம்பரியத்திற்கும் எதிரான கருத்துக்களை வெளியிடுவது என்ற வகைகளில் அவர் தொடர்ந்து பேசி வருவது தமிழ்நாட்டு மக்களிடையே ஆழமான மனக்காயத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

திறன், நேர்மை, பாரபட்சமற்ற தன்மை மற்றும் அரசியல் மேதமை போன்ற பண்புகளை வெளிப்படுத்திய ஆளுநர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக சர்க்காரியா ஆணையத்தின் அறிக்கை கூறுகிறது. அண்மை காலங்களில் உயர் அதிகாரிகளாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள், ஒன்றிய அரசை ஆளும் கட்சியோடு இருக்கும் நெருக்கத்தின் காரணமாக ஆளுநர் பொறுப்புக்கு நியமிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு ஆளுநர் பதவி வகிப்பதற்குரிய நேர்மை மற்றும் பாரபட்சமற்ற தன்மை பற்றி எந்த ஞானமும் இல்லை. மாநில மக்களுக்கும் அரசுக்கும் மனவேதனை தரும் வகையில் நடந்து கொள்கிறார்கள்.

ஒன்றிய அரசை ஆளும் கட்சிக்கு அல்லாத வேறு கட்சி ஆளும் மாநிலங்களின் தலைநகரங்களில் அமர்ந்து கொண்டு, ஒன்றிய ஆளும் கட்சியின் முகவர்களைப் போல மாநில அரசியலிலும் நலன்களிலும் தேவையற்ற தலையீடுகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். இது இந்தியாவின் கூட்டாட்சித் தன்மையைப் பாதிக்கும், ஜனநாயகத்தைச் சீரழிக்கும்.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி மிகச்சிறந்த உதாரணமாக தனது நடத்தையை அமைத்துக் கொண்டிருக்கிறார். ஆர்.என்.ரவி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாப்பதாகவும் தமிழ்நாட்டு மக்களின் நலன்களுக்காக சேவையாற்றுவதாகவும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 159ஆவது பிரிவின் கீழ் எடுத்துக் கொண்ட உறுதி ஆணைக்கு நேர் விரோதமாகச் செயல்படுகிறார்

எனவே அரசியலமைப்புச் சட்டம் வழங்கி யிருக்கிற ஆளுநர் பதவியில் தொடர்ந்து நீடிக்க அவருக்கு எந்தத் தகுதியும் இல்லை என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர் உடனடியாக அப்பொறுப்பிலிருந்து விலக்கப்பட வேண்டியவர் ஆகிறார்.

இந்திய குடியரசு தலைவர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு தமிழ் நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவியை அந்தப் பொறுப்பில் இருந்து உடனே அகற்ற தக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு கேட்டுக் கொள்கிறது.

மோடி அரசே, தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை உடனடியாகத் திரும்பப் பெறு என தமிழ்நாடு முழுவதும் பல்வேறு வடிவங்களில் பரப்புரைகள் மேற்கொள்வது என்றும், டிசம்பர் 29ஆம் தேதியன்று இந்த முழக்கத்தை முன்வைத்து ஆளுநர் மாளிகையை முற்றுகையிடுவதென்றும் ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

வெள்ளப் பாதிப்புக்கு நிவாரணம் வழங்குக:

வடகிழக்கு பருவமழை பெரும் தொடர் மழையாக பெய்து வருவதால் பல்வேறு பகுதிகளில் குடியிருப்புகள், சாலைகள் பாதிப்படைந்துள்ளன. காவிரி பாசனப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. இந்த இயற்கைப் பேரிடரை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறது.

குறிப்பாக மயிலாடுதுறை மாவட்டத்தில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை முதலமைச்சரும், அமைச்சர்களும் பார்வையிட்டு மீட்புப் பணிகளை விரைவுபடுத்தி வருகிறார்கள்.

தொடர்ச்சி 3ம் பக்கம்

கட்சிக் கடிதம்



# அரசியல், அமைப்பு நிலை பணிகளை முன்னெடுப்பீர்! நெல்லை சிவக்கட்டும்!

பேரன்புமிக்க தோழர்களே!

**அரசியல் மற்றும் அமைப்பு நிலை பணிகளை முனைப்புடன் மேற்கொண்டு வருவீர்கள். மகிழ்ச்சி.! திருப்பூரில் நடைபெற்ற மாநிலக்குழு கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட செயற்குழு மற்றும் மாநில நிர்வாகக்குழு கூட்டங்கள் நவம்பர் 12, 13 தேதிகளிலும், இதனைத் தொடர்ந்து நவம்பர் 14ம் நாள் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் கூட்டமும் சென்னையில் நடைபெற்றது.**

செயற்குழு, நிர்வாகக்குழு உறுப்பினர்களும் மாவட்டச் செயலாளர்களும் முழுமையாக கலந்து கொண்டது மட்டுமல்ல, குறிப்பிட்ட நேரத்தில் கலந்து கொண்டனர் என்பது பாராட்டுதற்குரியது.

இக்கூட்டங்களில் அரசியல் முடிவுகளும், அமைப்புநிலை பணிகள் குறித்தும் பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இம் முடிவுகளை மாவட்டக் குழுவின் இடைநிலைக் குழுக்கள், கிளை அமைப்புகள் உடனடியாக கூடி, விவாதித்து நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக 2023ம் ஆண்டிற்குரிய கட்சி உறுப்பினர் புதுப்பித்தல், சேர்த்தல் பணிகளை கட்சி அமைப்பு விதி வழிகாட்டுதலை பின்பற்றி மேற்கொள்ள வேண்டும்.

கிளைக் கூட்டத்தில் கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கட்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளது குறித்து பரிசீலனை செய்து, அதன் அடிப்படையில் புதுப்பித்தல் சேர்த்திடல் அமைந்திட வேண்டும்.

கட்சியின் உறுப்பினர்கள் அரசியல் மற்றும் அமைப்பு பணிகளில் செயல்படுவதை உறுதி செய்வதும், அவர்களை அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் வளர்த்தெடுத்தலும் முன்னுரிமை பெற்ற அமைப்பு நிலைப் பணியாகும்.

நமது கட்சியின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சாதாரணமானவர்கள் அல்ல.

கட்சியில் சேர்ந்த நாள் முதல் அர்ப்பணிப்பு உணர்வுடன், ஈகை, சேவை உணர்வோடும், செயல்படக் கூடிய ஆற்றல் மிகு செயல் வீரர்கள். இந்த செயல் வீரர்களை மேலும் மேலும் வளர்த்தெடுக்க கிளைகள் மாதம் தோறும் கூடுவது பயனளிக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கட்சி உறுப்பினர் புதுப்பித்தலுடன், புதிய உறுப்பினர்களை சேர்க்கவும் உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக மாணவர்கள் இளைஞர்கள் மற்றும் பெண்களை கட்சி உறுப்பினர்களாக சேர்ப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

கட்சி உறுப்பினர் புதுப்பித்தல் சேர்த்தல் பணிகளை 2023ம் ஆண்டு ஜனவரி 31க்குள் நிறைவு செய்திடல் வேண்டும் என்பது கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர் உறுதிபட எடுத்த ஒன்றுபட்ட முடிவாகும்.

அடுத்து, கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் வேலை பொறுப்பளித்தல் என்பது மிக முக்கிய பணியாகும். இத்தகைய பணிகளில் கிளைகளும், இடைக் குழுக்களும், மாவட்டக் குழுக்களும் மாநாட்டு நேரத்தில் கவனம் செலுத்தியுள்ளன.

மாவட்டக் குழுக்கள் கவனம் செலுத்தி இக்காலத்தில் நிறைவேற்ற வேண்டும்.

ஒவ்வொரு கட்சிக் கிளையிலும் வர்க்க, வெகுமக்கள் அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

அதற்கேற்றவகையில் ஒவ்வொரு கட்சி உறுப்பினருக்கும் கடமை பொறுப்பளித்தல் என்பது மிக, மிக முக்கியமாகும்.

உறுப்பினர்களுக்கு பொறுப்பளிப்பதன் மூலம் அவர்கள் களப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் மக்களோடு கட்சிக்கு நல்லதொரு தொடர்பும், புதிய அமைப்புகளை உருவாக்குவதற்கான நல்வாய்ப்புகளும் உருவாகும். கட்சி உறுப்பினரும் அரசியல் ரீதியாக, அமைப்பு ரீதியாக தங்களின் திறனை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது அல்லவா?

## ஏஐடியூசி மாநாடு

தமிழ்நாடு ஏஐடியூசியின் மாநில மாநாடு தாமிரபரணி பாய்ந்தோடும் நெல்லை சீமையில் டிசம்பர் 1, 2, 3 ஆகிய மூன்று தினங்கள் நடைபெறுகின்றது.

மாநாடு குறித்து ‘ஜனசக்தி’யில் தோழர்.எஸ்.காசிவிஸ்வநாதன் தொடர் கட்டுரைகளை வாரந்தோறும் எழுதி வருவதை படித்திருப்பீர்.

டிசம்பர் மூன்றாம் நாள் வரலாறு படைக்கவுள்ள மாபெரும் உழைக்கும் மக்கள் பேரணி நடைபெறவுள்ளது.

அனைத்து மாவட்டங்களும் பேரணிக்கு பெரும் படை திரட்டி வருவதாக தகவல்கள் வந்து கொண்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.

நாடு முழுவதும் உள்ள அனைத்து தொழிலாளர்களையும், அமைப்பு ரீதியாக அணிதிரட்டிய பெருமை நமது ஏஐடியூசிக்கு உண்டு என்பதனை எவரும் மறுத்திட இயலாது.

1920ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற ஏஐடியூசி தொழிலாளர்கள் உரிமைக்கு மட்டுமல்ல நாட்டின் விடுதலைக்கு மகத்தான பங்களிப்பு செலுத்தியுள்ளது.

நாட்டின் பரிபூரண விடுதலைக்காக முதல் குரல் கொடுத்திட்ட பெருமிதத்திற்குரிய சங்கம் ஏஐடியூசி.

தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்காக நலனுக்காக அவர்களின் உயர்விற்காக அர்ப்பணித்துக் கொண்ட மகத்தான பேரியக்கம் ஏஐடியூசி.

நூறு ஆண்டு கால வரலாற்றில் தொழிலாளி வர்க்கம் பெற்ற உரிமைகள், சட்டங்கள், சலுகைகள் மகத்தானது.

போராடி, சிறைச் சென்று, இரத்தம் சிந்தி, விலைமதிக்கவொண்ணா உயிர்களையும் பலி கொடுத்து பெற்ற உரிமைகள் அனைத்தையும் இன்றைய மோசடித்தனமான மோடி அரசு புதைக்குழியில் போட்டு புதைத்து வருகின்றது.

தொழிலாளி வர்க்கத்திற்கு துரோகம் இழைத்து, கார்ப்பரேட் பெரு முதலாளிகளின் நலன் காக்கும் வஞ்சகம் நிறைந்திட்ட அரசாக மோடியின் கொடுங்கோள் ஆட்சி நடைபெறுகின்றது.

கொடிய ஆட்சி புரிந்த வெள்ளையர்களை விரட்டியடித்த தொழிலாளி வர்க்கத்திற்கு மோடியின் ஆட்சி எம்மாத்திரம்.

“இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம்” என கொடுங்கோலன் ஜார் மன்னனின் ஆட்சி குறித்து நமது முண்டாசுக் கவிஞன் பாரதி பாடியது நினைவுக்கு வருகின்றது.

ஜார் மன்னன் ஆட்சி போல் சர்வாதிகார ஆட்சியாக, ஹிட்லரின் பாசிஸ்ட் ஆட்சியாக அமைந்துள்ள மோடியின் மோசடி ஆட்சியை அகற்ற வேண்டாமா?

களம் காண வேண்டாமா? ஆம், டிசம்பர் மூன்றாம் நாள் நெல்லை சீமை சிவக்கட்டும்!

நூறாய் ஆயிரமாய் பல்லாயிரமாய் புற்றீசலாய் படையெடுப்பீர் நெல்லை நோக்கி!

வீரபாண்டிய கட்டபொம்மனையும், கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனாரையும், பாட்டுக்கொரு புலவன் பாரதியினையும், தியாக சீலர் நல்லகண்ணுவையும், சட்டப் பணிகள் துறையில் மங்காச் சுடரொளியாம் வழக்கறிஞர் என்.டி.வானமாமலையினையும், மார்க்சிய அறிஞர் பேராசிரியர் நா.வா.யும், சட்டமன்ற நாயகராக திகழ்ந்த கோ.அழகர்சாமி, தொழிற்சங்க இயக்கத்தின் எஸ்.எஸ்.தியாகராஜன், சாரதி, சிவகிரி செல்லையா, வி.எஸ்.காந்தி போன்ற நல்ல முன்னோடிகளையும் நாட்டிற்கு தந்திட்ட நெல்லை சீமைக்கு வற்றாத வீரம் விளையும் வித்தகராக திகழ்ந்த தியாகி சுப்பிரமணிய சிவா, மாசில்லா தோழர்.ப.மாணிக்கம், தியாகச் செம்மல் கே.பாலதண்டாயுதம் போன்றோர் களமாடி புரட்சிகர சிந்தனையை வளர்த்தெடுத்த நெல்லை சீமைக்கு வரவேண்டாமா?

பெரும்படை பேரணியில் செஞ்சட்டையுடன், கரங்களில் செங்கொடி தாங்கி, சிங்கமென சிலிர்த்து எழுந்து கர்ஜிக்க ஒவ்வொருவரும் வரவேணடாமா? ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பல்லாயிரமாய், பல பல்லாயிரமாய், ஏன் லட்சமாய், லட்சேப லட்சமாய் அணி திரள வேண்டாமா?

திருப்பூரில் மோடியே வெளியேறு என ஓங்கி ஒலித்தக் குரல் நாடெங்கும் எதிரொலித்துக் கொண்டுள்ளது.

அக்குரல் ஓங்கி ஒலித்திட எட்டு திசையும் இடி ஓசையென முழங்கிட அணி திரள்வீர்! நெல்லை சீமை செங்கடலாக மாறாட்டும்.

மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்.

வணக்கம்

தோழமைமிக்க,

இரா.முத்தரசன்



# புதிய பசுமை புரட்சி செய்வோம்!



முனைவர் தி.ராஜ் பிரவின்

**நமது நாடு விடுதலை பெற்று 75 வது ஆண்டை நாம் கொண்டாடி வரும் சூழலில் வேளாண் மற்றும் சார்ந்த துறைகளில் பசுமை புரட்சி மற்றும் வெண்மை புரட்சி வாயிலாக உணவு மற்றும் பால் பொருட்கள் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தாலும் ஊட்டச்சத்துக்கள் குறைபாடு பிரச்சினைகளில் நாம் பின் தங்கியே உள்ளோம்.**



குறிப்பாக நமது தேசத்தின் கோடிக்கணக்கான பெண்கள், குழந்தைகளை பாதிக்கும் இப்பிரச்சினைகளுக்கு நம்மால் உரிய காலத்தில் தீர்வுகள் தர முடியவில்லை என்பதே மறுக்க முடியாத உண்மை. இதனால் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பிரிவினர் மற்றும் மத்திய தர பிரிவினர் அதிகப்படியாக பாதிக்கப்படும் நடைமுறைச் சூழலே நமது நாட்டில் உள்ளது.

இந்த ஊட்டச்சத்து பிரச்சினைகளை தீர்க்க மத்திய மற்றும் மாநில அரசுகள் வேளாண்மை, கால்நடை,மருத்துவ மற்றும் பொது விநியோகத் துறைகள் வாயிலாக பல்வேறு நலத்திட்டங்கள் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தாலும், உண்மையில் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள இப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் காணப்படவில்லை என்பதே நடைமுறை உண்மை.

இத்தகைய சூழலில் தற்போது நமது தேசத்திலும், உலகம் முழுவதும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வரும் பருவ மாற்று பிரச்சனைகள் மற்றும் வேளாண் சந்தைகளில் ஏற்படும் மிகப்பெரிய அளவிலான வேளாண் விளைப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களும் நமது நாட்டின் சிறு மற்றும் குறு விவசாயிகள், பண்ணை மகளிர், விவசாய தொழிலாளர்கள் மற்றும் ஏழை, எளிய பல கோடி நுகர்வோரின் வாழ்வுரிமைகளை கடுமையாக பாதிக்க செய்து வருகிறது.

இத்தகைய நடைமுறை சூழலில் தினந்தோறும் பாதிக்கப்படும் கோடிக்கணக்கான ஏழை, எளிய மக்கள் குறிப்பாக வளர் இளம் பெண்கள், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் உடல் நலம், எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு செயல் பட வேண்டியது இன்றைய முக்கிய தேவையாகும்.

இத்தகைய கோடிக்கணக்கான நமது தேசத்து பெண்களை, குழந்தைகளை அவர்களின் நிகழ் மற்றும் எதிர்காலத்தை பாதுகாக்கும் நோக்கில் அண்ணாமலைப் பல்கலைக் கழக வேளாண் புலம் கடந்த பல ஆண்டுகளாக தொடர் வேளாண் கள ஆராய்ச்சிகள் வாயிலாக செயல்படுத்தி வருகிறது. பல புதிய வேளாண் செயல் திட்டங்களை பல ஆயிரக்கணக்கான விவசாயிகளின் வயல்கள், தோட்டங்களில் அவர்களின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளின் வருமானத்தை பெருக்கியும், பருவ மாற்று பிரச்சினைகள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகள் பிரச்சினைகளுக்கு உரிய மற்றும் புதுமையான தீர்வுகளை வழங்கி வருகிறது.

கடந்த பல ஆண்டுகள் தொடர் வேளாண் ஆராய்ச்சிகளை அண்ணாமலைப் பல்கலை கழக வேளாண் புலத்தை சேர்ந்த பேராசிரியர். முது முனைவர். இராம. கதிரேசன் தலைமையிலான வல்லுநர் குழு மேற்கொண்டது. தமிழகத்தின் திட்ட கமிஷன் அடையாளப்படுத்திய மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் ஆகியவற்றில் அண்ணாமலை பல்கலைக் கழக ஒருகிங்கிணைத்த பண்ணைய விவசாய முறைகளை அறிமுகப்படுத்தியது. ஆயிரக்கணக்கான தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளின் வயல்களில் அவர்களின் குடும்ப பங்கேற்புடன் வெற்றிகரமாக நடைமுறைபடுத்தியது.

**விவசாயிகளின் வயல் 5 செண்ட் என்ற அளவில் பிரிக்கப்பட்டு, அவற்றின் ஓரத்தில் அதிக தண்ணீரை சேகரிக்க ஒரு அகழி தோண்டப்படும். பின்னர் அந்த வயலில் கோழி கூண்டுகள் அமைக்கபட்டு அவற்றில் கறிக்கோழிகள் வளர்க்கப்படும். நெல் வயலில் நீர் தேக்கப்படும் சூழலில் அவற்றில் கட்லா, கெண்டை போன்ற மீன் ரகங்கள் விடப்படும். இவ்வாறு நெல் வயலில் ஒரே பருவத்தில் நெல், மீன் , கோழி போன்றவை சாகுபடி செய்யப்படும்.**

நெல்லின் பருவ காலமான 90 முதல் 105 நாட்களுக்குள் மூன்று முறை கறி கோழிகள் வளர்க்கப்பட்டு, அவை விற்பனை செய்யப்படும். மறுபுறம் நெல் வயலில் விடப்பட்ட மீன்கள் சுமார் அரை கிலோ அளவிற்கு வளர்ந்தவுடன் அறுவடை செய்யப்படும்.

இவ்வாறு நெல், மீன், கோழி வளர்க்கும் விவசாயிகள் ஒரே பருவ காலத்தில், நெல், மீன், கோழி சாகுபடி வாயிலாக தங்கள் வயலில் மும்மடங்கு வருமானம் பெறலாம். இவ்வாறு நெல் வயலில் நாம் சாகுபடி பணிகளை மேற்கொள்ளும் போது செயற்கை உரங்கள், களைக் கொல்லிகள், பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்த வேண்டியது கிடையாது. நெல் வயல்களில் அமைக்கப்பட்டுள்ள கோழிகளின் எச்சங்கள் நல்ல இயற்கை உரமாகவும், மீன்கள் நெல் வயல்களில் உலாவுதால் அவைகளை தின்றும் காற்றோட்டத்தை நெல் வயல்களில் ஏற்படுத்தி இயற்கை முறையிலான நெல் உற்பத்திக்கு பெரிதும் துணை புரிகிறது.

இவ்வாறு மிகவும் குறைந்த செலவில், இயற்கை முறையில் விவசாயிகளுக்கு நெல், மீன், கோழி போன்றவை அவர்களின் வயல்களில் தங்களின் குடும்ப தேவைகளை சந்திக்கவும் மற்றும் வேளாண் சந்தைகளில் தங்களின் வேளாண் விளைப் பொருட்களை விற்பனை செய்து அதிகளவு லாபம் பெறவும் பெரிதும் உதவுகிறது.

மேலும் விவசாயிகள் குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் வயல்களில் வளர்க்கப்படும் கோழி, மீன்களை தங்களின் குடும்ப தேவைகளுக்கு பயன்படுத்தும் போது, அவர்களின் ஊட்டச்சத்து தேவைகளை குறிப்பாக பெண்கள், வளர் இளம் பெண்கள், குழந்தைகளின் நிறைவு செய்து மிகவும் எளிதான மற்றும் இயற்கையான முறைகளில் ஊட்டச்சத்து குறைபாடுகள் பிரச்சினைகளுக்கு நம்மால் உரிய தீர்வுகளை காண முடிகிறது.

தற்போது புதியதாக அண்ணாமலைப் பல்கலைக் கழக வேளாண் புலத்தில் அமைக்கப்பட்டுள்ள " விவசாயிக்களுக்கான வேளாண் தொழில் நுட்ப தகவல் மையம்" வாயிலாக பின்னலூரில் உள்ள வீர நாராயணன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்ததுடன் இணைந்து பன்முக செயல்களில் ஈடுபடுகிறது.

பருவ மாற்று பிரச்சனைகளான பெரு வெள்ளம், மழை போன்றவற்றை தாங்கி வளரும் தன்மை கொண்ட மற்றும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களை எதிர் கொண்டு வளரும் தன்மை கொண்ட வேளாண் "நாட்டு பாசுமதி" ரகத்தில் ஒருங்கிணைந்த பண்ணை விவசாய முறைகளை பின்பற்றி, தற்போதைய பருவ மாற்று பிரச்சனைகளுக்கு உரிய தீர்வுகள் காணவும், விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கவும் நமது தேசத்தை பாதித்து வரும் ஊட்டச்சத்து குறைபாடுகள் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை காணவும், சிறு மற்றும் குறு விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், பண்ணை மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் போன்ற அனைத்து பிரிவு கிராம மக்களை இணைத்து வேளாண் கள ஆய்வு மற்றும் விரிவாக்கப் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விவசாயிகளுடன் மற்றும் சர்வதேச நெல் ஆராய்ச்சி மையத்துடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் புலம் கொண்டுள்ள கூட்டு ஆராய்ச்சி மற்றும் கள விரிவாக்கப் பணிகள் வாயிலாக நமது நாடு சந்தித்து வரும் பருவ மாற்று பிரச்சினைகள், கோடிக்கணக்கான பெண்கள், குழந்தைகளை பாதிக்கச் செய்யும் ஊட்டச்சத்து குறைபாடுகள் பிரச்சனைகளுக்கு உரிய புதிய தீர்வுகளை காண ஒரு புதிய பசுமை புரட்சி வாயிலாக நாம் உருவாக்குவது நமது மாநிலத்தை மற்றும் தேசத்தை வேளாண் சார்ந்த வளர்ச்சி பாதையை நோக்கி கொண்டு செல்ல முடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

---

## 1 ம் பக்கத் தொடர்ச்சி

பயிர் காப்பீடு செய்ய 15.11.2022ஆம் தேதி கடைசி நாள் என்று அறிவிக்கப்பட்டிருப்பதை இந்த கால அவகாசத்தை நவம்பர் 30 வரை நீடிக்க வேண்டும்.

இந்த இயற்கை பேரிடரில் வசிப்பிடம் இழந்து நிற்கும் குடும்பங்களுக்கு மாற்று இடத்தில் பாதுகாப்பான வீடுகளும், வெள்ளத்தில் மூழ்கிய பயிர்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு தலா ரூ.30 ஆயிரம் வீதம் நிவாரணமும் வழங்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக்குழுக் கூட்டம் தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

போக்குவரத்துக் கழக ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி வழங்க அரசு தலையிடுக!

அரசு போக்குவரத்து கழக ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு 2015 நவம்பர் மாதத்திலிருந்து வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் அகவிலைப்படி உயர்வை உடனடியாக வழங்குமாறு ஆணை பிறப்பித்துள்ளது.

மேலும் காலதாமதம் செய்யாமல் அகவிலைப்படியை நீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளவாறு போக்குவரத்துக் கழகங்கள் உயர்த்தி வழங்க வேண்டும். ஆனால், இத்தொகை வழங்கப்பட வேண்டியது அவசியம் என்பது நன்கு தெரிந்திருந்தும், அது நீதிமன்ற தீர்ப்பாகவே வெளிப்பட்டிருந்தும் கூட போக்குவரத்து கழகங்கள் இதுவரை வழங்கவில்லை.

பள்ளி மாணவர்கள், பெண்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், மூத்த குடிமக்கள் உள்ளிட்டோருக்கு இலவசம் பேருந்துப் பயணம் செய்ய அரசு வாய்ப்பளித்து, மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக சமூகக் கடமையாற்றி வருகிறது. இதனை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தான் நிறைவேற்றி வருகின்றன.

போக்குவரத்து கழகங்களுக்கு, ஓய்வூதிய அகவிலைப்படியை வழங்குவதற்கு போதிய வருவாய் இல்லாத நிலை இருக்குமானால், பொருத்தமான வகையில் அரசு நிதி வழங்கி சரியான ஓய்வூதியம் வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு தமிழ்நாடு அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 33

## நீதிமன்றத்தில் மட்டுமல்ல, வீதிகளிலும்...

பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு 10% இடஒதுக்கீடு செல்லும் என உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பினையடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நவம்பர் 12ம் தேதி சட்டமன்ற அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

உழைக்கும் மக்களை தாழ்த்தப்பட்டவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று ஒதுக்குகிற, சனாதன (அ)தர்மத்தை ஆட்சிக் கொள்கையாகக் கொண்டு வர வேண்டும் என்று பேசும் பாரதிய ஜனதா அந்த கூட்டத்தில் கலந்து கொள்ளாதது வியப்பில்லை. ஆனால் அஇஅதிமுகவும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது 1992 ஆம் ஆண்டில் இட ஒதுக்கீடு 50 சதத்துக்கு மேல் போகக்கூடாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றம் 1993 94ம் கல்வி ஆண்டில் இட ஒதுக்கீட்டை 50%க்குள் சுருக்குமாறு தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டது.

ஜெயலலிதா அஞ்சவில்லை. அப்போது இருந்த இட ஒதுக்கீட்டை பாதுகாப்பதற்காக, சட்டப்பேரவையில் தனிச் சட்டத்தை இயற்றினார். அனைத்து கட்சிக் குழுவை அழைத்துச் சென்று, பிரதமர் நரசிம்மராவை சந்தித்து, அந்தச் சட்டத்துக்கு ஒப்புதல் தருமாறு குடியரசுத் தலைவரை வலியுறுத்த வைத்தார். அதோடு நிறுத்தி விடாமல் அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது ஷெட்யூலில் அதனை சேர்க்க வைத்து நீதிமன்றங்கள் இனி அதை எதிர்த்து தீர்ப்பளிக்க முடியாதபடி உறுதி செய்தார். இதனால் அவருக்கு ‘சமூக நீதி காத்த வீராங்கனை’ என்ற பட்டத்தை திராவிடர் கழகம் வழங்கியது.

2007 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 26.5%, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20%, பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கு 3.5%, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு 18%, பழங்குடியினருக்கு 1% என மொத்தம் 69% இட ஒதுக்கீடு செய்து அறிவிக்கப்பட்டது

மீண்டும் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த போது திமுக ஆட்சி வழங்கிய 69% இட ஒதுக்கீட்டை மேலும் உறுதி செய்ய, மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையப் பரிந்துரையைப் பெற்று அமைச்சரவை கூட்டத்தில் வைத்து நிறைவேற்றினார்.

இப்போது பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவுக்கு இட ஒதுக்கீடு என்ற பெயரில், மாதம் 66 ஆயிரம் ரூபாய் வருவாய் உள்ளவர்களை ஏழைகள் என அறிவித்து, செல்வ வளம் மிக்க உயர் சாதியினருக்கு 10% இட ஒதுக்கீடு வழங்குவதை எதிர்ப்பதற்காக கூட்டப்பட்ட கூட்டத்திற்கு அந்த ஜெயலலிதாவின் கட்சி கலந்து கொள்ளவில்லை. தன்னுடைய பாரம்பரிய வழிமுறைகளில் இருந்து எந்த அளவுக்கு அக்கட்சியின் தலைவர்கள் தடம் புரண்டு விட்டார்கள் என்பதை தமிழ்நாட்டு மக்கள் சிந்தித்து பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டுக்கு மோடி வந்த போது, வரிசையில் நின்று வரவேற்றவர்களில் ஒருவராக இருந்த முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியின் கையைக் குலுக்கி ‘ஹவ் ஆர் யூ’ என்று மோடி கேட்டு விட்டாராம். இது அந்தக் கட்சியின் ‘இரண்டரைக் கோடி’ உறுப்பினர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாம். இதனை முன்னாள் அதிமுக அமைச்சர் ஜெயக்குமார் போற்றிப் பெருமை கொண்டு கூத்தாடுவதைப் பார்க்க கவலையே மேலிடுகிறது.

தமிழ்நாடு என்றால், அங்கு ஆட்சிக்கான போட்டி திமுக, அதிமுக இடையே தான் என்பது 45 ஆண்டுகளாக நிலை பெற்று உள்ளது. ஆனால் அதிமுகவை சிதைத்து, விழுங்குவதன் மூலம் தன்னைப் பெரிய கட்சியாக மாற்றிக் கொள்வதை இலக்காகக் கொண்டு, பாஜக அனைத்து நெருக்கடிகளையும் கொடுத்து வருகிறது.

உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரித்த ஐந்து நீதிபதிகளும் உயர்சாதியைச் சார்ந்தவர்கள்தான். அவர்களில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதி உட்பட இருவர், இந்த ஒதுக்கீடு முறையற்றது என்றே தீர்ப்பளித்துள்ளார்கள்.

தமிழகத்தில் இந்த ஒதுக்கீட்டை செயல்படுத்தப் போவதில்லை என்று தமிழ்நாடு அரசு எடுத்துள்ள நிலை பாராட்டத்தக்கது. மேலும் தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளன.

சமூக நீதிக்கான போராட்டம் உச்சநீதிமன்ற அளவில் மட்டும் முடிந்து போவது அல்ல. சபரிமலைக்கு பெண்களும் செல்லலாம் என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து, பாஜக கிளர்ச்சிகளை மேற்கொண்டு செயல்படுத்த முடியாமல் தடுத்தது.

தமிழ்நாட்டு மக்கள் இந்த 10% ஒதுக்கீட்டுக்கு எதிரான போராட்டத்தில் வெற்றி பெற, தமது ஆற்றல் மிக்க பங்களிப்பைச் செலுத்த வேண்டும்.



சேகுவேராதாஸ்

# கரும்புத் தோட்டத்தின் இரும்பு மனிதன்!

1926ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 13ந் தேதி ஏன்சல் காஸ்ட்ரோ, லினா ஆகியோருக்கு மகனாக பிறந்தார் பிடல்காஸ்ட்ரோ.

1941ம் ஆண்டு பெலன் கல்லூரியில் சேர்ந்தார். அப்போதுதான் அவர் கம்யூனிச கொள்கைகளை பற்றி தெரிந்து கொண்டார்.

1945ம் ஆண்டு 2வது உலகப்போர் முடிவுக்கு வந்தபோதுதான் பிடல் காஸ்ட்ரோ தனது கல்லூரி படிப்பை முடித்து இருந்தார். ஹவானா சட்டப்பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பை முடித்தார்.

அப்போதுதான் கம்யூனிச கொள்கைகள் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. பின்னாளில் அவர் ஒரு முழு கம்யூனிசவாதியாக மாறினார். ஹவானா பல்கலைக்கழகத்தில் இரு கட்சி தலைமைகள் இருந்தன. அதாவது கம்யூனிஸ்டு கட்சி மற்றும் ஆர்த்தோடாக்ஸ் இயக்கம் என்பது ஆகும். கம்யூனிஸ்டு கட்சியில் இணைந்து அரசியலில் கொஞ்சம், கொஞ்சமாக ஈடுபட்ட பிடல் காஸ்ட்ரோ, முதல் தேர்தலிலே பிரசாரத்தில் ஈடுபட தொடங்கினார். அத்தேர்தலில் வெற்றியும் பெற்றார். மேலும் கல்லூரியில் பயிலும்போதே பல போராட்டங்களை முன்னின்று நடத்தினார். தன் அபார பேச்சு திறமையால் மக்களை அதிகம் கவர்ந்தார்

கியூபாவின் எல்லா வளங்களும், சொத்துக்களும் கியூபாவுக்கும், கியூப மக்களுக்குமே சொந்தம், வேறு எந்த நாட்டவர்களுக்கும் உரிமை கிடையாது என்று பேசினார்.

1952ம் ஆண்டு கியூபாவின் ஆட்சியை பாடிஸ்டா கைப்பற்றினார்.பாடிஸ்டா அமெரிக்காவின் கை கூலியாக செயல்பட்டார்

அப்போதுபிடல்காஸ்ட்ரோ ‘குற்றம்சாட்டுகிறேன்’ என்ற இதழை தொடங்கினார். பின்னர் அதில் பாடிஸ்டா அரசின் தில்லுமுல்லுகளையும், பாடிஸ்டா அமெரிக்காவின் கைப்பாவை என்பதையும் அம்பலப்படுத்தி மக்களை புரட்சிக்கு திரட்டினார்.

1953ம் ஆண்டு ஜூலை மாதம் 26ந் தேதி மொன்காடாத் ராணுவ முகாமின் மீது தாக்குதல் நடத்த பிடல் காஸ்ட்ரோ திட்டமிட்டார். ஆனால் அவரது வாகனத்தில் ஏற்பட்ட கோளாறு மற்றும் இருட்டில் மற்ற வீரர்கள் வழி தவறியது ஆகிய காரணங்களால் திட்டம் தோல்வியில் முடிந்தது.

அதை தொடர்ந்து பிடல் காஸ்ட்ரோ கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு 1953ம் ஆண்டு நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது புரட்சி திட்டம் தீட்டியதை பிடல் காஸ்ட்ரோ ஒப்புக்கொண்டார். எனினும் பாடிஸ்டா அரசின் தில்லுமுல்லுகளை வெளிக்கொண்டு வந்து, அமெரிக்காவை கடுமையாக சாடினார். பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்”

நீதி மன்றத்தில் தனது உரையை பிடெல் நிகழ்த்தினார் ‘’நீதிபதி அவர்களே, தனக்குச் சாதகமான பாதையை நோக்கிப் பயணிப்பவன் ஒரு உண்மையான மனிதனல்ல. கடமை எத்திசையில் இருந்து அழைக்கிறதோ, அத்திசையில் பயணிப்பவனே உண்மையான மனிதன். அவனது இன்றைய கனவு, நாளைய சட்டமாகும்.

ஏனென்றால் அவன்தான் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தவன். பல நூற்றாண்டுகளாக வரலாற்றின் பழைய பக்கங்களில் உள்ள, இரத்தம் தோய்ந்த போராட்ட நாட்களையும், பெரு நெருப்பில் அழிந்த சமூகங்களையும், அறிந்தவனால் மட்டுமே, மனித குலத்தின் எதிர்கால வாழ்வை சிந்திக்க முடியும்.என் நாட்டு மக்கள், பலரும் பசியோடுதான் படுக்கப் போகிறார்கள். மருத்துவ வசதிகள் ஏதுமின்றிக் குழந்தைகள் கல்லறைகளை நாடுகிறார்கள். முப்பது சதவீத மக்களுக்குத், தங்கள் பெயரைக் கூட எழுதத் தெரியவில்லை.

அதைவிடக் கொடுமை, தொண்ணூற்று ஒன்பது சதவீத மக்களுக்கு நாட்டின் வரலாறே



தெரியவில்லை.நீதிபதி அவர்களே, நீங்கள் எனக்குக் கொடுக்க இருக்கின்ற தண்டனை கடுமையானதாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும். சிறையைக் கண்டோ அல்லது இந்த கொடுக்கோல் ஆட்சியைக் கண்டோ, அஞ்சுபவனல்ல நான்.நீங்கள் என்னை சிறையில் அடைக்கலாம் ஆனால் வரலாறு என்னை விடுவிக்கும் என்று கர்ஜித்தார்’’

1955ம் ஆண்டு மே மாதம் 15ந் தேதி விடுதலை செய்யப்பட்டார். விடுதலைக்கு பிறகு மெக்சிகோ சென்ற பிடல் காஸ்ட்ரோ, கொரில்லா போர்முறை தாக்குதலை கற்றார். மேலும் அவருக்கு போராளி சேகுவாராவின் அறிமுகம் கிடைத்தது. அவர் கியூபா விடுதலை போராட்டத்தில் தன்னையும் இணைத்துக்கொண்டார். அவர்கள் கிரான்மா என்ற கள்ளத்தோணி மூலம் கியூபா நாட்டுக்கு வந்தனர்.

1956ல் ‘ஜூலை 26 இயக்கம்‘ என்ற பெயரில் 82 வீரர்களைத் திரட்டி, மீண்டும் பாடிஸ்டா ராணுவத்தைத் தாக்கி, சிதைத்தார் காஸ்ட்ரோ. மெதுமெதுவாக கியூபாவுக்குள் ஊடுருவி, தன்னைப் போல் புரட்சிகர எண்ணமுள்ள இளைஞர்களை இணைத்துக்கொண்டார்.

1959ல் பாடிஸ்டாவிடமிருந்து ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றினர் காஸ்ட்ரோ, 1959 முதல் 1976 வரை கியூபாவின் பிரதமராகவும், பின்பு 1976 முதல் 2008 வரை அந்நாட்டு அதிபராகவும் பொறுப்பு வகித்தார்.

அள்ள அள்ளக் குறையாத கியூபாவின் சர்க்கரையை, சல்லிசு விலையில் இனி அமெரிக்கா அள்ளிச் செல்ல முடியாது என்று அறிவித்தார்.

கியூபாவில் இருக்கும் அமெரிக்க எண்ணெய் நிறுவனங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. அந்தச் சமயம் வலுவான வல்லரசாக இருந்த சோவியத் யூனியன், காஸ்ட்ரோவுக்குக் கை கொடுத்தது.

கியூபாவின் பொருளாதாரத்தைப் போட்டுத் தாக்குவது அமெரிக்காவின் திட்டம். ஆனால், அசரவில்லை காஸ்ட்ரோ! கியூபாவிலிருந்த அமெரிக்காவின் 850 மில்லியன் டாலர் சொத்துக்களை அரசுடைமையாக்கி, அதிர்ச்சி அணுகுண்டை வீசினார்.

சுருட்டு’ப் பிரியரான காஸ்ட்ரோவை அவர் பிடிக்கும் சுருட்டில் வெடிகுண்டு செட் செய்து

தொடர்ச்சி 5ம் பக்கம்



நீ.சு.பெருமாள்

# நூறு ஆண்டுகளுக்குள் இட ஒதுக்கீடு நிலைமை!



**பொருளாதாரத்தில் பின்தங்கிய முற்பட்ட வகுப்பினருக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு செல்லும் என்கிற, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு என்பது பலகாலம் போராடிப் பெற்ற சமூக நீதிக்கான உரிமைகளுக்கு ஒரு மாபெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பது இட ஒதுக்கீட்டின் வரலாற்றை உணர்ந்தவர்கள் நன்கு அறிவார்கள்.**

தற்போது தமிழக முதல்வர் உச்சநீதிமன்றத்தின் இந்த 103வது சட்ட திருத்த தீர்ப்பை எதிர்த்து மறு சீராய்வு மனு திமுக சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று அறிவித்திருப்பது பாராட்டுதலுக்குரியது.

தொன்மை வாய்ந்த தமிழ்ச் சமூகம் என்றைக்குமே சக மனிதனை நேசிக்கிறவகையில் தான் பயணிக்கும் என்பதற்கு இந்த மறு சீராய்வு மனு சரியான எடுத்துக்காட்டாகும்.

1927 ல் சுப்பராயன் அமைச்சரவையில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்கிற இட ஒதுக்கீடு சட்டம் இந்தியாவிலேயே முதன் முதலில் கொண்டுவரப்படுகிறது .

இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டு இன்னும் நூறு ஆண்டுகள் கூட ஆகவில்லை.

இதற்குள் டீக்கடை பெஞ்சில் அல்ல, உச்சநீதிமன்றத்திலேயே, நீதிபதிகளால் இன்னும் எத்தனை காலம்தான் இட ஒதுக்கீட்டு கொள்கையை பின்பற்றுவது என்கிற குரல்கள் ஒலிக்கத் தொடங்கி உள்ளன.

நல்லவேளை இரண்டு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பை வழங்கியுள்ளனர். ஒரே ஒரு நீதிபதி மெஜாரிட்டி அடிப்படையில் தீர்ப்பு நிறைவேறப்பட்டிருக்கிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினரை அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக பண உதவி, வீடு கட்ட உதவிசெய்தல் உள்ளிட்ட எல்லாமே செய்யலாம். ஆனால் கல்வியில் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வழங்குவது சமூகநீதிக்கு எதிரானது....

கடந்த கால வரலாற்றை கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம்...

1853 ஆம் ஆண்டில் சென்னை மாகாணம் என்பது தமிழ்நாடு கேரளம் ஆந்திரம் கர்நாடகம் மற்றும் ஒரிசாவின் ஒரு பகுதியாக விரிந்து இருந்தது.

ஆந்திராவில் உள்ள நெல்லூர் மாவட்ட ஆட்சியராக ஓர் ஆங்கிலேயர் வருகிறார். அந்த நெல்லூர் ஆட்சியர் அலுவலகத்தில் மொத்தம் மூன்று பிராமண குடும்பத்தைச் சேர்ந்த 49 ஊழியர்கள் மட்டுமே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்ணன், தம்பி, மாமன் மைத்துனர் என உறவினர்களாக இருக்கும் இந்த மூன்று குடும்பத்தவர் கரங்களில்தான், ஒட்டுமொத்த நெல்லூர் மாவட்ட நிர்வாகம் இருக்கிறது என்பதை அறிந்து கொண்ட அந்த ஆட்சியருக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது.

இதனால் அவருக்கு பல நிர்வாக சிக்கல்கள் ஏற்படுகிறது. ஆட்சியர் நினைப்பதை அரசாங்கத்தின் திட்டங்களை அனைத்துப் பகுதி மக்களுக்கும் கொண்டு செல்ல முடியவில்லை. இதனை பிரிட்டிஷ் அரசுக்கு தெரிவிக்கிறார்.

**குறிப்பிட்ட ஒரு வகுப்பார் மட்டுமே ஒட்டுமொத்த அரசாங்கத்தின் உயர்மட்ட பணியில் எல்லாத் துறைகளிலும் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் தவறுகளை தட்டிக் கேட்க முடியவில்லை, அரசாங்கத்தின் ஆணைகள் அவர்கள்(பிராமணர்கள்) நினைத்தால் தான் மக்களுக்கு சேருகிறது. இது மாபெரும் ஒரு சாதிய வன்மமாக இருக்கிறது.**

என்று அறிக்கை ஒன்றை அனுப்புகிறார்.

ஆம்... முதன் முதலில் அந்த வெள்ளைக்கார ஆட்சியர்தான் சமூக நீதிக்காக குரல் கொடுத்தார் என்கிறது வரலாறு.

அன்றைய வருவாய் நிர்வாக ஆணையம் (போர்ட் ஆஃப் ரெவின்யூ) அறிக்கையினை ஆராய்கிறது.

அதனைத் தொடர்ந்து போர்ட் ஸ்டேண்டிங் ஆர்டர்ஸ் (BS O)125 (எண்) 1854 என்ற உத்தரவை வழங்கியது. அதன்படி அரசு ஊழியர்களை மாவட்ட ஆட்சியர்கள் தேர்ந்தெடுத்து பணியில் அமர்த்தும் போது உயர் ஜாதியினரை அதிக அளவில் தேர்ந்தெடுக்கக்கூடாது.

தாசில்தார்களின் ஒரு பகுதி பிராமணர்கள் அல்லாதவர்களாக இருக்கும்படி பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் அந்தந்த மாவட்டத்தில் இருக்கும் பெருவாரியான சாதியினராக இருக்கும் மக்களுக்கு உரிய பணியிடங்கள் வழங்க வேண்டும் என மதராஸ் பிரசிடென்சியின் கணக்கீட்டுத் தலைவர் கீ ஸி கார்னீஷ் உத்தரவிடுகிறார்.

மேலும் சென்னை மாகாணம் முழுவதிலும் எந்தெந்த சாதியினர் எந்த அளவுக்கு அரசுப் பணிகளில் உள்ளனர் என்பதை ஒரு கணக்கெடுப்பின் மூலம் தெரிந்து கொள்வது என்கிற வகையில் கணக்கெடுப்பு நடத்துவதற்கும் உத்தரவிடப்படுகிறது. அதில் சென்னை மாகாண மொத்த மக்கள் தொகையில் 3 விழுக்காடு மட்டுமே இருக்கிற பிராமணர்கள், அரசுப் பணிகளில் 19 சதவிகிதம் இருக்கிறார்கள் என்பதை அந்த கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

அதாவது ஒட்டு மொத்த குடும்பமே நெல்லூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் போல, சென்னை மாகாணம் முழுவதும் பரவியுள்ளனர் என்கிற வகையில் புள்ளி விவரங்கள் ஆதார பூர்வமாக கிடைக்கிறது.

இதே சமகாலத்தில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம், பிராமணர் அல்லாதோரை ஒன்று திரட்டுகிறது. அதுவே பிற்காலத்தில் 1916 நவம்பர் 20 ல் நீதிக்கட்சியாக உருவெடுக்கிறது.

அன்றைய சென்னை மாகாணத்தில் நான்கரை கோடி பேர் மக்கள் தொகை. இதில் 15 லட்சம் பேர் பிராமணர்கள். ஆனால், அன்றைய அவர்களின் ஆளுமையைக் கவனிப்போம்.

1885-ல் காங்கிரஸ் கட்சி தொடங்கப்பட்ட போது சென்னையில் இருந்து சென்ற ஆறு பிரதிநிதிகளில் 5 பேர் பிராமணர்கள்.

சென்னை பல்கலைக்கழகத்தில் 1910-ல் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் எண்ணிக்கை 650 பேர்.

இதில் பிராமணரல்லாத இந்துக்கள் வெறும் 12 பேர்கள் மட்டுமே.

பிற மதத்தினர் கிறிஸ்தவர் உள்ளிட்டோர் எண்ணிக்கை 72 பேர்கள் மட்டுமே, அதாவது 566 பட்டதாரிகள் பிராமணர்களாகவே இருந்தனர்.

இந்த பட்டதாரிகள்தான் அரசு உயர் நிர்வாகத்திற்கு யார் வர வேண்டும்? என்கிற முடிவை செய்கிற வாக்குரிமையை பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1907 ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்திற்கு பட்டதாரிகள் சார்பில் 12 பேர் தேர்வாகினர். இதில் ஒரே ஒருவர் மட்டுமே பிராமணரல்லாதோராக இருந்தார்.

1910க்கும் 1919 க்கும் இடையில் அரசு உயர் நிர்வாக குழுவில் இடம்பெற்றிருந்த 9 பேரில் 8 பேர் பிராமணர்கள்....

இதுதான் நீதிக் கட்சி தொடங்கியபோது இருந்த சமுதாய அமைப்பு

இதை எதிர்த்து தான் நீதிக் கட்சி களமாடும் முடிவுக்கு வருகிறது.....

நீதிக் கட்சி ஆட்சியில் சென்னை மாகாணத்தில் படித்து பட்டம் பெறுவதற்கு சமஸ்கிருதம் கட்டாயபாடமாக இருக்க வேண்டும் என்பதை தூக்கி எறிந்தது. இது திராவிட மக்களின் ஆட்சி.... சமஸ்கிருதம் எதற்கு எனக் கேட்டது. பெண்களுக்கு இந்தியாவிலேயே முதன் முதலில் வாக்குரிமை வழங்கியது.

தேவதாசி ஒழிப்பு மசோதா உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்த சட்டங்களை இயற்றிய மாநிலம் சென்னை மாகாணம்.

அதன் நீட்சிதான் சமூக நீதி என்கிற இன்றைய இட ஒதுக்கீடுக்கு ஆபத்தாகிறபோது தமிழகம் கொந்தளிக்கிறது.

இந்தி எழுத்தை தார் பூசி இன்று கன்னடர்கள் தங்கள் மாநிலத்தில் அழிக்கிறார்கள். அதாவது 50 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகம் செய்ததை கன்னடர்கள் இன்று உணர்கிறார்கள்.

இட ஒதுக்கீட்டின் அவசியம் சமூக நீதியின் முக்கியத்துவத்தை மற்ற மாநிலங்களும் உணர இன்னும் காலங்கள் தேவைப்படும்.

இட ஒதுக்கீடு சமூக நீதி என்பது அவசியம் தேவை என்பதை தமிழக முதலமைச்சர் போல் மற்ற மாநில முதல்வர்களும் எதிர்காலத்தில் நிச்சயம் குரல் கொடுப்பார்கள் என்பது உறுதி

தொடர்புக்கு: 9442678721

4 ம் பக்கத் தொடர்ச்சி

பார்த்தார்கள். பலிக்கவில்லை. அவரைக் கொல்ல 1,400 பேருக்கு ஆயுதம் கொடுத்து அனுப்பிப் பார்த்தார்கள். நடக்கவில்லை. அவர் அணியும் 'ஸ்கூபா டைவிங் சூட்'டில் கொடிய நோய்க் கிருமிகளைத் தெளித்துப் பார்த்தார்கள். உணவுகளிலும், மாத்திரைகளிலும் விஷத்தைக் கலக்க முயன்றார்கள்.

காஸ்ட்ரோவின் தாடியில் உள்ள ஒற்றை முடியைக்கூடப் பொசுக்க முடியவில்லை அமெரிக்காவால்! காஸ்ட்ரோவின் முன்னாள் காதலியான மரிட்டா லோரென்ஸ், மீண்டும் காஸ்ட்ரோவைச் சந்தித்து, "நம் சந்தோஷத்தை ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டாடலாம்'' என்றாள். அது விஷ ஐஸ்க்ரீம்! "ஏன் அவ்வளவு கஷ்டப்படுகிறாய்? நீ என்னைத் தாராளமாகச் சுட்டே கொன்றுவிடலாம்!" என்று சிரித்துக்கொண்டே அவளிடம் தன் துப்பாக்கியை நீட்டினார் காஸ்ட்ரோ. அவ்வளவுதான்... விதிர் விதிர்த்து, வெடவெடத்து காஸ்ட்ரோவின் காலடியில் சரண்டரானார் மரிட்டா. அமெரிக்காவின் இப்படியான கொலை முயற்சிகளை அடிப்படையாக வைத்து உருவான, 'காஸ்ட்ரோவைக் கொல்ல 638 வழிகள்' என்ற குறும்படம் படுபிரபலம் ஆனது. 90 வயதில் பிடல் காஸ்ட்ரோ 25 நவம்பர் 2016ல் இயற்கை எய்தினார்.

முதலாளித்துவம் கொல்லும், கம்யூனிசம் வெல்லும் என்பதற்கு ஏற்ப, பல நாடுகளுக்கு ஆதர்சமாக திகழ்ந்தார். அதன் காரணமாக தொடர்ந்து லத்தின் அமெரிக்கா நாடுகளில் இன்றளவும் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்து கொண்டு இருக்கிறது.

நவம்பர் 25 தோழர் ஃபிடல் காஸ்ட்ரோ நினைவுதினம்

தொடர்புக்கு: 81448 09010

# இளசை அருணாவின் நினைவுகள் அழிவதில்லை

**இலக்கிய பேராசன் ஜீவா, அன்றை இளைஞர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தோழர் அழகர்சாமியிடம் மகாகவி பாரதிக்கு நாமே விழா எடுக்க வேண்டும். வீதி வீதியாக செல்வோம். மக்களிடம் வசூலிப்போம். விழாவை நடத்துங்கள் என்று ஆணை இட்டார். பாரதி முற்போக்கு வாலிபர் சங்கம் பிறந்தது. தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தோடு இணைந்தது. விழாவை நடத்த வேண்டிய பொறுப்பு தோழர்களுக்கு கிடைத்தது. இளசை மணியனும், இளசை அருணாவும் உடன்பிறப்புகள். தொடக்க காலத்தில் இருந்தே பாரதிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்.**



பாரதியை வீதி எங்கும் கொண்டு சென்ற மாபெரும் கலைஞன் கவிஞர் இளசை அருணா. ஒட்டப்பிடாரத்தில் ஆசிரியராக பணியாற்றியவர். முதல் ஆண்டு பாரதி விழா 1962ல் தொடங்கியது. அதனைக் கேள்விப்பட்டு உடனடியாக களத்திற்கு வந்தவர் அருணா.. வரும்பொழுது பிரஷையும் கையில் கொண்டு வந்தார். அன்று தொடங்கிய அவருடைய ஓவியக்கலை டிஜிட்டல் யுகத்திற்கு போர்டுகள் மாறும் வரை ஓயவில்லை. எட்டயபுரம் வீதிகளில் மட்டுமின்றி சுற்றுவட்டார கிராமங்களிலும், ஒட்டப்பிடாரத்திலும் வீதி வீதியாக அலைந்து பாரதி விழாவிற்காக நிதி சேகரித்தார்.

பாரதி, வ. உ. சி, பாரதிதாசன் விழாக்களை தொடர்ந்து நடத்திய அருணா, 2022 நவம்பர் 8ம் நாள் 84 ஆவது வயதில் மறைந்து விட்டார். இவருடைய கையெழுத்துக்கள் கண்ணில் ஒத்திக் கொள்ளும்படி அற்புதமாக இருக்கும். இவருடைய கையால் எழுதப்பட்ட எழுத்துக்களை அச்சில் கூட கொண்டு வர முடியாது என்பார்கள்.

'அச்சுப்பிழைகள்', 'கரிசல் கீதங்கள்', 'ஒரு கனவின் தலைப்பு,' போன்ற பல நூல்களை மரபுக் கவிதைகளாகவும், 'ஒரு இந்திய கவிஞனின் சராசரி கோபம்', 'ஒரு அப்னார்மலின் முனகல்' போன்ற நூல்களை புதுக் கவிதைகளாகவும் வெளியிட்டுள்ளார். 'ஒரு கவிஞனின் கதைகள்' என்ற சிறுகதை தொகுப்பு நூலையும், 'கரிசல் மண்ணின் இலக்கியவாதிகள்' பற்றிய இரு தொகுப்பு நூல்களையும் எழுதியுள்ளார்.

வ. உ. சி விருது, தமிழறிஞர் விருது, பாரதி பணிச்செல்வர் விருது, பாரதி விருது போன்ற பல விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர்.

எட்டயபுரத்தில் பாரதி விழா நடக்கின்ற காலங்களில் தனது ஓவியத் திறமையால் பாரதியை வீதியெங்கும் பரப்பியவர். இவரோடு இணைந்து பணியாற்றிய ஆயன், வையனன்,கோவில்பட்டி சிவன், பிதப்புரம் எஸ். ராமசுப்பு, பலரை குறிப்பிடலாம்.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதமே எட்டயபுரத்தின் பால் பண்ணையில்தான் ஓவியங்கள், எழுத்துக்கள் தட்டி போர்டுகள் எழுதப்படும். ஒரு நாள் ஆயன் மட்டும் எழுதிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு தோழர் கையில் ஒரு பையுடன் உள்ளே நுழைந்தார். இளசை அருணா உட்பட நாமெல்லாம் எழுதிய தட்டி போர்டுகளை கட்டுவதற்காக வெளியே சென்று விட்டோம். சாத்தப்பட்டிருந்த போர்டில் எழுதிக் கொண்டிருந்த ஆயன் "தட்டி போர்ட்டுக்கு பேப்பர் ஒட்ட வேண்டும். எல்லோரும் வெளியே போய் விட்டார்கள்" என்ன செய்வது? என்று தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது வந்தவர் எனக்கும் தட்டி போர்டு ஒட்டத் தெரியும். நான் வேண்டுமானால் ஒட்டுகிறேன். பசையைத் தடவி ஒட்ட ஆரம்பித்து விட்டார். ஆயன் சொன்னார் ராமசுப்பு இருந்தால் சுருக்கம் இல்லாமல் ஒட்டுவார். வந்தவரும் சொன்னார் நானும் சுருக்கம் இல்லாமல் ஒட்டுகிறேன்.

அப்போது உள்ளே நுழைந்த இளசை அருணா, ஆயன் யாரை ஒட்டச் சொல்லி இருக்கிறீர்கள்? ஆயன் அப்பொழுது தான் திரும்பி பார்த்தார். போர்டுகளில் பேப்பர் ஒட்டுபவர் தான் கே.டி.கே. தங்கமணிஞ்'

ஆயன் ஆடிப் போனார். அருணாவும், ஆயனும், நாமும் மன்னிப்பு கேட்க கே.டி.கே.தங்கமணி ஏன் நான் இந்த வேலையை செய்ய கூடாதா? என்ற போது தான் நிம்மதிப் பெருமூச்சு வெளிப்பட்டது.

எட்டயபுரத்து வீதிகளில் பாரதி விழாவின் போது பாஞ் சாலி சபதம் நாடகத்தை நடத்தினோம். எட்டயபுரத்து தோழர்கள் நடித்த அந்த நாடகத்தில் பிராம்டராக ஸ்கிரிப்ட்டும் கையுமாக அருணா செயல்பட்டார். நல்ல உதாரணங்களை அவருடைய எழுத்துக்களில் கொண்டு வருவார். அவற்றில் இலக்கிய நயம் சொட்டும். உதாரணமாக ஜடாயு சிறகு விரித்த எஸ் எஸ் தியாகராஜன், பாரதி பல்லக்கை தூக்கிய தி. முத்துகிருஷ்ணன், தூரிகை தூக்கிய சிவன் இவ்வாறு அடுக்கிக் கொண்டே செல்லலாம். பாரதி விழா கவியரங்கில் கவிதைகளை வாசிப்பதற்கு கூட அழகான நோட்டுக்களாக திருமண அழைப்பிதழ்களை மாற்றுவார்.

பாரதி பிறந்த நூற்றாண்டு விழாவின் பொழுது நூறு கவிஞர்களை தமிழகம் முழுவதிலும் இருந்து திரட்டி எட்டயபுரத்திலும், புதுவையிலும் பாரதிக்கு கவிதாஞ்சலி நிகழ்ச்சியை தமிழ் கவிஞர்கள் சங்கம் சார்பில் நடத்தினார்.

திருநெல்வேலியில் நான்காண்டுகளுக்கு முன்பு அவருடைய 80வது ஆண்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது. தமிழ் கடல் நெல்லை கண்ணன், வண்ணதாசன் போன்ற இலக்கிய ஆளுமைகள் அதில் பங்கேற்றனர்.

இறுதி மூச்சு உள்ளவரை கலை இலக்கிய பெருமன்றத்தையும், பாரதி முற்போக்கு வாலிபர் சங்கத்தையும், தமிழ் நாடு கவிஞர்கள் சங்கத்தையும் நேசித்த அருணா மறைந்து விட்டார். பொதுவுடைமை இயக்கத்தின் வேர்களைத் தேடி அலைந்த அருணாவின் உள்ள உறுதி, பாரதியை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு வாழ்நாள் முழுவதும் மக்களுக்கான கலை இலக்கியத்தில் செயல்பட்டது.

அவர் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரில் வசித்து வந்தார். 80 வயதைக் கடந்து கோமதி விநாயகம் இவருடைய வாழ்க்கை துணைவர். வாழ்நாள் முழுவதும் துணைய நின்றார். அருணா ஜீவபாரதி, அருணா ஹம்சத்வனி என இரண்டு மகள்கள்.

இவர்களுக்கு நம்முடைய ஆறுதல்கள். வாழ்நாள் முழுவதும் கலை இலக்கியத்தில், பெருமன்றத்தோடு இணைந்து மூழ்கித் திளைத்த அருணாவிற்கு செவ் வணக்கங்கள்.

ரெட் சல்யூட் !

**– எஸ்.காசிவிஸ்வநாதன்**
**தொடர்புக்கு: 94435 27486**

# ஒன்றிய அரசின் மக்கள் விரோத கொள்கைகளைக் கண்டித்து தென்காசியில் ஆர்ப்பாட்டம்




தென்காசி மாவட்டம், செங்கோட்டையில் ஒன்றிய அரசின் மக்கள் விரோத கொள்கைகளான புதிய மின்சார மசோதாவை கண்டித்தும், அரசு சொத்துக்களை தனியாரிடம் தாரை வார்ப்பதை கண்டித்தும், மாநில அரசின் சொத்துவரி உயர்வைக் கண்டித்தும், நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள தாலுகா அலுவலகத்திற்கு ஒரே ஒரு கழிப்பறை உள்ளது. இயற்கை அவஸ்தை எற்படும் போது பெண்கள் படும் கஷ்டங்களை நகராட்சி நிர்வாகத்திடம் மனு கொடுத்தும் செவிசாய்க்காத நகராட்சியை கண்டித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.மாரியப்பன் தலைமை தாங்கினார். தாலுகா செயலாளர், எஸ்.ஆழ்வார், மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.சுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் தி.இசக்கித்துரை கண்டன உரையாற்றினார். ஏ ஐ டி யூ சி மாவட்ட கௌரவ தலைவர் ஏ. சாமி, மாவட்ட குழு உறுப்பினர் பி.எஸ்.எஸ். போஸ், நகர செயலாளர் சி. சுப்பிரமணியன் ஜனசக்தி நிருபர் பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். ஆர். செல்லையா நன்றி உரை ஆற்றினார்.

**வாசுதேவநல்லூர்:** வாசுதேவநல்லூரில் ஒன்றிய துணைசெயலாளர் பி. முருகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நகரசெயலாளர் ஆர்.ராஜன் முன்னிலை வகித்தார். மாவட்ட ஏஐடியூசி பொதுச்செயலாளர் ஜி. சுப்பையா கண்டன உரை ஆற்றினார். ஒன்றிய செயலாளர் ப. வேலு, மாவட்ட குழு உறுப்பினர் பி. சிங்காரவேலு, நகர துணை செயலாளர் எம். கோட்டியப்பன், த.பாலவிநாயகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சுரண்டை:** தென்காசி மாவட்டம் சுரண்டையில் பொருளாளர் ஆர்.ரத்தினசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தாலுகா துணைச்செயலாளர் என். அய்யப்பன், பி. துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் தி. இசக்கித்துரை கண்டன உரையாற்றினார்.

மாவட்ட பொருளாளர் தி. சுப்பையா, தாலுகா செயலாளர் எம். எஸ். கிட்டப்பா, மாவட்ட குழு உறுப்பினர் ஏ. பரமசிவம் விவசாய சங்கம் மாநில குழு உறுப்பினர் எஸ். வேலாயுதம் கே. அய்யப்பன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**ஆழ்வார்குறிச்சி:** தென்காசி மாவட்டம் ஆழ்வார்குறிச்சி அண்ணா சிலை முன்பு புதிய மின்சார மசோதா, சொத்துவரி உயவைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தாலுகா குழு உறுப்பினர் சட்டநாதன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் ஜீவா, துணை செயலாளர் அரிகரன், சிவசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தார். மாவட்ட குழு உறுப்பினர்கள் வேலாயுதம், பரமசிவம் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

# த.ஒ.வா.இ. நாமக்கல் மாவட்ட விரிவடைந்த பேரவைக் கூட்டம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் நாமக்கல் மாவட்ட விரிவடைந்த பேரவை கூட்டம் திருச்செங்கோட்டில் எல்.மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. முதலாவதாக தந்தை பெரியார் சிலைக்கு இயக்கத்தின் மாநில செயலாளர் ஏ.அஷரப்அலி, மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், சிபிஐ மாவட்ட செயலாளர் கே.அன்புமணி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மாவட்ட துணைச் செயலாளர் சி.முருகேசன் வரவேற்புரை ஆற்றினார். சிபிஐ மாவட்டச் செயலாளர் கே.அன்புமணி, ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், வி.தொ.ச. மாவட்ட செயலாளர் சி.ஜெயராமன், வி.ச. மாவட்ட செயலாளர் என்.செல்வராஜ், எச்.எம்.எஸ். மாநில துணை தலைவர் கே.செல்வராஜ், இ.பி.எப். பென்சனர் மண்டல செயலாளர் இ.சண்முகம், ஏஐடியுசி கட்டிட சங்க தலைவர் சி.நந்தகுமார், ஏஐடியுசி ஆட்டோ சங்கத் தலைவர் டி.கே.சுப்பிரமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்டத் தலைவராக என்.செல்வராஜ், மாவட்டச் செயலாளராக எஸ்.ராமகிருஷ்ணன், மாவட்டத் துணைத் தலைவர்களாக கே.தங்கராசு, எல்.மாரிமுத்து, பி.கே. பார்த்திபன் ஆகியோரும், மாவட்ட துணைச் செயலாளர்களாக சி.முருகேசன், ஆண்டவர் ஏ.அருள் ஆகியோரும், மாவட்ட பொருளாளராக ஏஅசோகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். த.ஒ.வா.இ. மாநில செயலாளர் ஏ.அஷரப்அலி இன்றைய மத்திய மாநில அரசின் மக்கள் விரோத போக்கை பற்றியும், இயக்கத்தின் எதிர்கால கடமைகள் பற்றியும் விளக்கிப் பேசினார்.

குமாரபாளையம் பகுதியில் வீடு இல்லாத பெண்கள் மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாக மனு கொடுத்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் இதுவரை வீட்டுமனை கொடுக்கவில்லை உடனடியாக அவர்களுக்கு வீட்டுமனை ஒதுக்கி தர வேண்டும்.

திருச்செங்கோடு தோக்கவாடி பகுதியை சேர்ந்த ஊசி, பாசி விற்று பிழைப்பு நடத்தும் பெண்கள் பத்து குடும்பங்கள் வீட்டு மனை கேட்டு மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், ஜமாபந்தியில் மனு கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை உடனடியாக அவர்களுக்கு வீட்டுமனை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



எஸ்.காசிவிஸ்வநாதன்

**தமிழ்நாடு ஏஐடியூசி 20வது மாநாடு திருநெல்வேலியில் டிசம்பர் 1,2,3 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. வீரம் விளைந்த மண், விடுதலைப் போராட்டத்தில் முதல் முழக்கமிட்ட மண், தொழிலாளர்கள் விவசாயிகள் போர்க்குரல் உயர்த்திய முதல் மண், இடதுசாரி இயக்கங்களின் தடம் பதித்த மண், ராமச்சந்திர நெடுங்காடியும், பாலனும், மாணிக்கமும் இன்னும் எத்தனையோ தலைவர்களும் போராடிய மண், பொதிகை நதி ஓடிவரும் மண் , பண்டைய பாரம்பரியம் மிகுந்த மண், நவீன மாற்றங்களை உள்ளடக்கிய மண் நெல்லை.**

போக்குவரத்து போன்ற அமைப்பு சார்ந்த துறைகளில் பணியாற்ற தொழிற்சங்க அனுபவம் பெற்ற தலைவர்கள் உருவானார்கள். நெசவு, பீடி சுற்றுதல் போன்ற எந்திரத் தொழில் அல்லாத அமைப்புசாரா தொழில்களிலும், வியாபாரத்துறை, அச்சு தொழில், ஒட்டல், தோணி, துறைமுகம், சரக்கு சுமை ஏற்றுதல் போன்ற துறைகளில் சங்கங்கள் உருவாகி அகில இந்திய ஏஐடியூசி யுடனும், மாநில தலைமையுடனும் இணைக்கப்பட்டன.

மாவட்ட ரீதியில் இச்சங்கங்களின் இயக்கங்களுக்கு தலைமை வகிப்பதற்கு மாவட்ட தொழிற்சங்க கவுன்சில் (ஏஐடியூசி) உருவாக்கப்பட்டது. அனுபவம் வாய்ந்த தலைவர்கள் வி. மீனாட்சிநாதன், பி. ராஜகோபால், இ. தளவாய், காமாட்சி, வி.எஸ். மாணிக்கம், ஏ. பால்ராஜ், பயில்வான் அருணாச்சலம், ஆர். கணபதி, ஏ.எல்.நரசிம்மன்,ஏ. வி. கோபாலன், ஏ. சாமி போன்ற தோழர்கள் பெரும் பங்கேற்றார்கள். மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் நம் சங்கத்தை உருவாக்குவதற்காக இ. தளவாய் கடும் முயற்சிகளை மேற்கொண்டார். இரவு பகலாக அவர்களோடு வாழ்ந்து சங்கத்தை கட்டினார்.

தொழிற்சங்கங்களில் தோழர்களின் பணி அதிகமாயிற்று. கட்சியின் அரசியல் கொள்கைகளை ஏற்றுக் கொண்ட தொழிலாளர்கள் கட்சி உறுப்பினர்களாக சேர்ந்தார்கள். தொழிலாளர் வர்க்க கட்சியாக இயங்குவதற்கு வேண்டிய நடைமுறைகள் அனைத்தும் மாவட்டத்தில் மாணவன் லூர்தநாதன் தடியடிக்கு ஆளாகி பலியானார்.

போலீஸ் அக்ரமத்தையும், வன்முறைச் செயலையும் கண்டித்து நெல்லை பாளையங்கோட்டை நகர மக்களும், மாவட்ட மாணவர்களும் வ.உ.சி காலத்து நெல்லை எழுச்சியை போல திரண்டு எழுந்தனர். மீண்டும் மீண்டும் வன்முறை, தடியடி, துப்பாக்கி பிரயோகம் நடைபெற்றது. போலீஸ் அடக்கு முறையை கண்டித்து தடுத்து நிறுத்துமாறு கோரியும், நீதி விசாரணை வேண்டியும் அனைத்துக் கட்சிகளையும் இணைத்து ஒன்றுபட்டு இயக்கம் காண நடவடிக்கைகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்டது.

மக்கள் எழுச்சிக்கு ஆட்சியாளர்கள் பணிந்தார்கள். மாவட்ட நீதிபதி கோதண்ட ராமராஜ் தலைமையில் நீதி விசாரணை குழு அமைக்கப்பட்டது. அன்றைய நம் கட்சியின் தோழர் வழக்கறிஞர் பாளை என்.சண்முகம் முக்கிய பங்காற்றினார். நீதிமன்றத்தில் மட்டுமின்றி மக்கள் மன்றத்திலும் மக்களை திரட்டி அடக்குமுறை கண்டன இயக்கத்தை நடத்தினார். இச்சம்பவத்தின் உண்மை நிலையை விளக்கி பல கூட்டங்களை நடத்தினார். மாவட்ட அரசியல் தலைமையும், தொழிற்சங்கத் தலைமையும் அடக்குமுறை கண்டன இயக்கத்திற்கு மக்களின் ஒரு முகமான ஆதரவை திரட்டினார்கள்.

கமிஷன் விசாரணைக்கு பின்னர் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர், சில காவலர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்குகள் நடைபெற்றன. போலீஸ்காரை பாதுகாக்க

# விடுதலைக்கு முதல் முழக்கமிட்ட மண்ணுக்கு வாருங்கள்!



எத்தனை எத்தனை தோழர்கள் தங்கள் இன்னுயிரையும், வாழ்க்கையையும் தியாகம் செய்து இருக்கின்றார்கள். நெல்லைச் சதி வழக்கு செங்கொடி இயக்கத்தை அழித்துவிடும் என்று ஆட்சியாளர்கள் கனவு கண்டனர். பாலனையும் இன்ன பிற தலைவர்களையும் சிறைக்குள்ளே தள்ளிவிட்டோம். அடங்கி விடுவார்கள் என்று ஆர்ப்பரித்தார்கள். பாலன், கே. பி. எஸ் மணி, வா.மீனாட்சியநாதன் ஆயுள் தண்டனைகளை அனுபவித்து சிறையிலே வாடிய நேரத்திலேதான் இயக்கம் வேகமாக வளர்ச்சி பெற்றது. எம். ஆர். வெங்கட்ராமன் மாவட்ட அமைப்பாளராக நெல்லைக்கு அனுப்பப்பட்டார். சிறையில் இருந்து தோழர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே வந்தார்கள். எம்.ஆர்.வி. யும், நா.வானமாமலையும் சுற்றிச்சூழன்று பணியாற்றினார்கள்.

அடக்குமுறையின் கொடுமையினால் சித்திரவதைக்கு ஆளாகி மாண்டவர்கள் தியாகிகளானார்கள். பொன்னு கொடூரத் தாக்குதலில் மூளையில் சேதம் ஏற்பட்டு உடல் உறுப்புகள் எல்லாம் பழுதுபட்டு குணமடையாமல் மாண்டார். வேலாயுதம் சித்திரவதைக்கு ஆளானார். உடல் தளர்ந்து காச நோயால் பீடிக்கப்பட்டு தாம்பரம் டி.பி மருத்துவமனையில் ரத்தம் இரத்தமாக கக்கி உயிரிழந்தார். இப்படி செங்கொடி தியாகிகளின் பட்டியல் நீண்டது.

**வழக்கு, கைது, அடக்குமுறை என்ற நெருப்பு மழை ஓய்ந்தது. விவசாய சங்கம் புனரமைக்கப்பட்டது. வேலுச்சாமி தேவர் செயலாளரானர். மாவட்டம் முழுவதும் பரவியது. பஞ்சம், கொடிய பஞ்சம் எம்.ஆர். வெங்கட்ராமன் இந்த நிலைமைகளை விளக்கி 'பஞ்சமோ பஞ்சம்' என்று சிறு நூலை எழுதினார். கோவில்பட்டியில் பஞ்ச நிவாரண மாநாடு நடைபெற்றது. சோ. அழகர்சாமி மக்கள் தலைவராக உயரத் தொடங்கினார்.**

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சிக்கு ஆறு முறை மாவட்டச் செயலாளராக ப. மாணிக்கம் பணிபுரிந்தார். பல்துறை வளர்ச்சி ஏற்பட்டது. தோழர்களுக்கு தத்துவார்த்த அறிவு போதிக்கப்பட்டது.

ஆ.முத்துசாமியின் தலைமையில் ஆசிரியர்கள் இயக்கம், ஆசிரியர் கூட்டணி நெல்லை மண்ணிலே தான் தொடங்கியது. ஆசிரியர்கள் அணி திரண்டனர்.

தொழில் நகரங்கள் அனைத்திலும் தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்டன. பஞ்சாலை, சிமெண்ட், மின்சாரம், மேற்கொள்ளப்பட்டன.

திருநெல்வேலியில் லைன் மோட்டார் கம்பெனி நிர்வாகம் எட்டு தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தது. முறையீடுகளும், வற்புறுத்தல்களும் பலனளிக்கவில்லை. நல்லசிவன் எட்டு நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். அரசியல் தலைமை கிராமப்புற விவசாயிகளை தொழிலாளர் போராட்டத்திற்கு ஆதரவாக திரட்டி உண்ணாவிரதம் மேற்கொண்டனர். மோட்டார் தொழிலாளர் சங்கம் வலுவானது. மாவட்ட மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. பாபநாசம், சுவாமிநாதன் பி. ராஜகோபால் போன்ற தோழர்கள் முன்னணியில் இருந்து செயல்பட்டார்கள். மாநில இணைச்செயலாளராக பி. ராஜகோபால் தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்டபொம்மன் போக்குவரத்து கழகம் உருவானது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இதில் பங்கேற்று இவர் சிறை சென்றார். சிறையில் நடந்த ஒரு விபத்தில் கண்ணில் அடிபட்டு பார்வை குறைவு ஏற்பட்டது. மாவட்ட தொழிற்சங்க கவுன்சிலுக்கு எஸ். எஸ். தியாகராஜன் செயலாளராக செயல்பட்ட போது தான் பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டம் உட்பட பல்வேறு போராட்டங்கள் நடந்தன.

தோழர்களே, மாநில மாநாடு பொதுக்கூட்டம் நடைபெறுகின்ற இடத்தில் லூர்தநாதன் சிலை அமைக்கப்பட்டு இருக்கின்றது. இதற்குப் பின்னால் ஒரு நெடிய போராட்டம் உண்டு. பாளையங்கோட்டையில் 1970களின் தொடக்கத்தில் பேராசிரியர் சீனிவாசன் தாக்கப்பட்டார். இதனைக் கண்டித்து கண்டன இயக்கத்தை நடத்தினோம். பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் என சகலரும் ஒன்றுபட்டு ஊர்வலம் நடத்தி மாவட்ட ஆட்சியரிடம் நீதி விசாரணை வேண்டுமென்றும், குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும் என்றும் கூறினோம். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடியிருந்த மாணவர்களை போலீசார் அடித்து விரட்டிய போதுதான்



முயன்ற அரசின் முயற்சிகள் மக்கள் இயக்கத்தின் வலிமையால் முறியடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள். மறைந்த மாணவன் லூர்தநாதன் சிலை நிறுவப்பட்டது.

போராட்டக் களத்திலே புடம் போட்டு எடுக்கப்பட்ட தோழர்களின் செம்புதல்வர்களே நெல்லைக்கு வாருங்கள்...


தேசிய இயக்கத்தில் தோன்றிய தீவிர கருத்துக்களால் உணர்ச்சி பெற்றவர்கள். தொழிலாளி வர்க்க அரசியலில் முதன் முதலாக நெல்லை மாவட்டத்தில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார்கள். இளைஞர் சங்கமாக தொடங்கிய பொதுவுடமை இயக்கம் உருவாக்கியதுதான் அரசியல் இயக்கம், தொழிலாளர் இயக்கத்தையும், விவசாயிகள் இயக்கத்தையும் தோற்றுவித்தன.

பொதிகை மலைச் சாரலில் தோன்றிய புரட்சிக்காற்று கீழ் திசை நோக்கி வீசத் தொடங்கியது. மலைக்கும் கடலுக்கும் நடுவில் உள்ள பகுதிகளையும் இக்காற்று அசைத்தது. உழைக்கும் மக்களுடைய இயக்கங்கள் தோன்றின.

“கம்யூனிசம் என்னும் பிசாசை விரட்ட முதலாளிகளும், மதத் தலைவர்களும், முதலாளித்துவ அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்று சேர்ந்து மந்திரம் ஜெபித்து கூக்குரல் எழுப்பினர்” இன்று மார்க்ஸ்சும், ஏங்கல்சும் கம்யூனிஸ்டு அறிக்கையில் எழுதியது போலவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் இன்றைக்கு வளந்து நிற்கின்ற கார்ப்பரேட் முதலாளித்துவமும் அழித்துவிடலாம், தொழிலாளி வர்க்கத்தை முறியடித்து விடலாம் என்று நினைக்கிறார்கள். அது ஒருபோதும் நடை பெற முடியாது என்பதை எடுத்துக்காட்ட உழைக்கும் வர்க்கமே ஒன்று திரண்டு திருநெல்வேலிக்கு வாருங்கள். தொழிலாளி வர்க்கத்தின் படை இதுதான் பார் என்று சொல்ல வாருங்கள்!

தொடர்புக்கு: 94435 27486

# பிரிட்டன் இன்று



**கிரேட் பிரிட்டன், தற்போது பெரும் பொருளாதாரக் குழப்பத்தில் இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில், உலகின் அனைத்து நாடுகளுமே கோவிட் பெருந்தொற்றின் மோசமான பொருளாதாரத் தாக்கத்தின் இன்னல்களை அனுபவித்தன, அவை இப்போது மெல்ல மீட்சியடைந்து வருகின்றன.**

பிரிட்டனும் ஐரோப்பாவும் மேலும் ரஷ்யா உக்ரைன் போரின் காரணமாகக் கோதுமை தானியம் வரத்து, பெட்ரோல் கச்சா எண்ணை மற்றும் எரிவாயு வழங்கல் வரத்து குறைந்ததன் தாக்கத்தாலும் துன்பப்பட்டு வருகின்றன. இதன் விளைவு பிரிட்டனில் அதிகரித்த பணவீக்கம் சுமார் 10%. இது கடந்த 40 ஆண்டுகளில் உச்சபட்சமாக இருக்கலாம்.

இதன் காரணமாக மேலும் வணிகத் தொழில் மத்தியில் ஸ்திரத்தன்மையின்மை ஏற்பட்டது. வெறும் 45 நாட்களுக்குள் நாட்டின் ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் இரண்டு பிரதமர்கள் மாறிவிட்டார்கள், தற்போது மூன்றாவது பிரதமராக ரிஷி சுனக் (இந்தியப் பூர்வீகத்தைச் சேர்ந்தவர்) அக்டோபர் 24ல் ஆளும் கட்சி நாடாளுமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


பொருளாதாரத்தில் கடும் ஏற்ற இறக்கம், தடுமாற்றம் மற்றும் அதன் அரசியல் பின்விளைவுகள் அடுத்தடுத்த விரைவான காட்சி மாற்றம் என உலகை ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளன.

பிரிட்டிஷ் பொருளாதாரம் சந்திக்கும் முக்கியப் பொருளாதாரச் சவால்களில் முக்கியமானது; தொடரும் பணவீக்கம், முலாம் பூசப்பட்ட அரசுப் பத்திரங்களின் மதிப்பைக் குறைத்துவிட்டதால் அவற்றின் விலைகளும் வீழ்ச்சி அடைந்தன. இப்பத்திரங்கள் ஊழியர்களின் பென்ஷன் நிதியத்தின் முக்கிய ஆஸ்தியாக இருந்தது. இந்த நிதியம் ஒரு பக்கம், சந்தையில் மறைமுக நிதியின் முக்கிய ஊற்றாகவும், மறுபுறம் ஊழியர்களின் சேமிப்புக்கு நிலைத்த வருவாயாகவும் இருந்தது.

பணவீக்கம், சாதாரண மனிதருக்குக் கிடைந்த இந்த வருவாய் ஆதார ஊற்றையும் மற்றும் பிரிட்டிஷ் முதலீட்டுச் சந்தையின் பென்ஷன் நிதியத்தின் பங்கையும் கீழே தள்ளிவிட்டது.

ரஷ்யாவிலிருந்து எரிவாயு வழங்கல் மற்றும் கச்சா எண்ணெய் வரத்துக் கடுமையாக குறைந்ததால் நீண்ட கடும் மழை காலத்தைச் சந்திக்கும் நிலையில் எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டது. எரிபொருளுக்கு ரேஷன் முறையை அமல்படுத்துவது பரிசீலனையில் உள்ளது; மேலும் எரிபொருட்கள் விலை கடுமையாக உயர்ந்ததால் வாழ்க்கை செலவு நெருக்கடி உண்டாகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் ‘உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம்’ ஆய்வறிக்கை அதன் துணைத் தலைப்பாக ‘வாழ்க்கை செலவு நெருக்கடியை எதிர்கொள்ள’ என்பதை இணைத்துள்ளது.

பிரிட்டனின் பொருளாதாரம் இந்தியாவைவிட மேம்பட்ட மட்டத்தில் இயங்கினாலும், அது புதிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது. அமெரிக்காவில் ‘சப் பிரைம் கடன் வழங்கல் நெருக்கடி’யின் விளைவாக ஏற்பட்ட 2008 பொருளாதார மாபெரும் பின்னடைவின் தாக்கத்திலிருந்து மெல்ல மீண்டாலும், பிரிட்டன் தற்போது கரோனா பெருந்தொற்றின் பின்விளைவுகள், ரஷ்ய உக்ரைன் போரின் நேரடி பாதிப்பு மற்றும் அவற்றுடன் பொதுமக்கள் திரளின் வருவாய் குறைவு, வாங்கும் சக்தியில் வீழ்ச்சி வாழ்வாதாரச் சிக்கல்கள், மற்றும் வட்டி விகித அதிகரிப்பால் வேலைவாய்ப்பை உண்டாக்குவதில் ஏற்படும்பாதிப்புப்போன்ற அவ்வப்போது முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஏற்படும் பின்விளைவுகளைச் சந்திக்கிறது. [அமெரிக்காவில் 2008 பொருளாதாரப் பெரும்பின்னடைவு என்பது வகைதொகை இல்லாமல் எளிய வட்டிக்குக் கடன் கொடுத்ததால் கட்டுமானத் தொழில் அபரிமிதமாகக் கொழித்தது. மக்கள் தேவைக்கும் அதிகமாக வீடுகளையும், அரசுப் பத்திரங்களையும் கடனுக்கு வாங்கிக் குவித்தனர். இது ஒரு நிலையில் தேக்கத்தை ஏற்படுத்த, மக்கள் வீடுகளை விற்க முடியாமல், வாங்கிய கடனையும் திரும்பச் செலுத்த முடியவில்லை. ‘வளர்ச்சி போன்று வீங்கிய நீர்க்குமிழி உடைந்தது’, கடன் கொடுத்த வங்கிகள் திவால் ஆயின. ஒரு நிலையில் வங்கிகளில் கடன் கொடுக்க கரன்சி இல்லை, மதிப்பிழந்த செக்குரிட்டி பத்திரங்கள் மட்டுமே இருந்தன. இதையே ‘சப்பிரைம் கடன் வழங்கல் நெருக்கடி’ என அழைக்கிறார்கள். இந்த 2008 பொருளாதாரப் பின்னடைவால் பலர் வேலை இழந்தனர், தங்கள் சேமிப்புகளையும் வீடுகளையும் இழந்தனர்.]




## ‘கன்சர்வேடிவ்’ கொள்கைகள்

பிரிட்டனின் கன்சர்வேடிவ் கட்சி, அதன் குறை கால அரசுகள் மூலம், அதனது பணக்காரர்களுக்கு ஆதரவான, தொழிலாளர் விரோதமான கொள்கைகளை அமல்படுத்த முயன்றது; அம்முயற்சி தொழிலாளர் வர்க்கத்தின் மீதும், மூலதனச் சந்தையின் மீதும்கூட தாக்குதல்களை ஏவியது. பொருளாதார மீட்பை ஊக்குவிக்க அரசு பொதுமக்களுக்கு எந்த நிவாரண உதவிகளையும் அளிப்பதைத் தவிர்த்தது; ஆனால், அதிபணக்காரர்களுக்கு வரிகளைக் குறைத்துச் சலுகைகள் வழங்கியது.

இதனால் ஏற்படும் வருவாய் இழப்பைப் பொதுமக்களிடமிருந்து கடன் வாங்கி ஈடுகட்டும் யோசனையை முன் வைத்தது. கூடுதல் கடன்களைத் திரும்பச் செலுத்தும் சக்தி அரசுக்கு இல்லை என்ற புரிதல் காரணமாகச் சந்தையும் பொது மக்களும் திடீரெனவும்

# என்.டி.வானமாமலை நூற்றாண்டு விழாவை இஸ்கஃப் கொண்டாடுவது பாராட்டுக்குரியது

## இரா.நல்லகண்ணு புகழாரம்!




இந்திய கலாச்சார நட்புறவுக் கழகத்தின் (இஸ்கப்) செங்கல்பட்டு காஞ்சிபுரம் மாவட்ட 24 வது மாநாடு மேற்கு தாம்பரத்தில் நடை பெற்றது . இந்திய கலாச்சார நட்புறவு கழகத்தின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா வழக்கறிஞர் என்.டி.வானமாமலை நூற்றாண்டு படத்திறப்பு, தமிழக பாரம்பரிய பண்பாட்டு கலாச்சார கலை விழா ஆகிய முப்பெரும் விழாவாகவும் நடைபெற்றது.

“இஸ்கப்” காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்ட செயலர் எல். அசோக்குமார் வரவேற்புரை வழங்கிட , தலைவர் ஆதிமாறன் தலைமையில், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் குத்து விளக்கேற்றி மாநாட்டை தொடங்கி வைத்தார். மூத்த அரசியல் தலைவர் இரா. நல்லகண்ணு என்.டி.வானமாமலை திருவுருவப் படத்தை திறந்து வைத்து பேசியதாவது:

என்.டி. வானமாமலை படத்திறப்பில் கலந்து கொண்டது மகிழ்ச்சி அளிக்கிறது. பொதுவுடமை இயக்கத்தில் இருந்து விடுதலைப் போராட்டங்களில் கலந்துகொண்டு பங்களிப்பு செய்தவர். சிறந்த வழக்கறிஞராகவும் இந்திய சோவியத் நட்புறவு கழகத்தின் பொதுச்செயலாளராகவும் செயல்பட்டு வந்தவர்.

நெல்லை நாங்குநேரி வைணவ தளத்தில் பிறந்து வளர்ந்து படித்து சமூக சேவை செய்து கொண்டு இருந்தவர். பொது வுடமை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு வாழ்நாள் முழுவதும் அதற்காகவே பாடுபட்டவர். பலரது வாழ்க்கையை முன்னேற்ற உதவியவர்.


வழக்கறிஞர் தொழிலிலும் ஏழை எளிய மக்களின் வழக்குகளுக்கு காசு பணம் கேட்க மாட்டார். உயர்நீதிமன்றம் உச்ச நீதிமன்ற வரை வாதிடக் கூடிய திறமை பெற்று இருந்தார். கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது சுமத்தப்பட்ட நெல்லை சதி வழக்குகளில் ஆஜராகி, பாதிக்கப்பட்டவர்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தார். அவரின் நூற்றாண்டு தினத்தில் அவரது திரு வுருவப்படத்தை இந்திய கலாச்சார நட் புறவு கழக மாநாட்டில் திறந்து வைத்து அவருக்கு நன்றி கடன் செலுத்துவது பாராட்டுக்குரியது. இவ்வாறு பேசினார்.

இந்திய கலாச்சார நட்புறவு கழகத்தின் மாநில பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராதாகிருஷ்ணன், நீதிபதி புகழேந்தி, முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் அழகிரி சாமி, நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி மனோகரன்,காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற தலைவர் செல்வ பெருந்தகை, தாம்பரம் மாநகர மேயர் வசந்த குமாரி, கமலக்கண்ணன், பட்டிமன்ற பேச்சாளர் புலவர் மா.இராமலிங்கம், தாம்பரம் நாராயணன் உள்ளிட்ட பலரும் வாழ்த்துரைத்து பேசினர்.

பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு இஸ்கப் மாநில துணைத்தலைவர் டாக்டர் பாலகிருஷ்ண ராஜா பரிசுகள் வழங்கி பாராட்டுக்கள் தெரிவித்தார். த.க.இ.பெ. காஞ்சி செங்கல்பட்டு மாவட்ட தலைவர் ஜீவா மணிக்குமார், மூத்த தலைவர் மக்கள்தாசன், சி.லோக நாதன் ஜீ. பூபாலன், ரத்தன் சந்திர சேகர், இஸ்கஸ் மாநில செயலாளர் தமிழ்மது, மாநிலத் துணைத் தலைவர் வழக்கறிஞர் தேசிங், சென்னை மாவட்ட செயலாளர் செந்தில்குமார், காஞ்சி செங்கை மாவட்ட செயலாளர் தாமரைக்கண்ணன், மு.க.ஜீவா உள்ளிட்ட பலரும் விழா நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பேராசிரியர் முனைவர் இரா.காளீஸ் வரன் தலைமையில் ஜென்னிமார்க்ஸ் கலை குழுவினரின் கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இஸ்கப் தாம்பரம் மாநகர தலைவர் டி .எம் .ஜி மார்க்ஸ் ஆனந்த் நன்றி உரைத்தார்.

# ...ர: அன்று பேரரசு ... பெருங்குழப்பம்



கூர்மையாகவும் எதிர்வினையாற்றினர்.

முந்தைய பிரதமரும் நிதியமைச்சரும் நோக்கமின்றி 'நம்பிக்கையில் செய்த தவறு'க்காகப் பதவி விலக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. பெரும் தொழில்களின் முக்கிய தொழிற்சங்கங்கள் சில ஏற்கனவே வேலைநிறுத்தத்தில் இறங்கிவிட்டன, மற்றவை வேலைநிறுத்த அறிவிப்புக் கொடுத்திருந்தன. ஒட்டுமொத்தத்தில் நிலைமை மக்கள் விரோதமாக ஆகியிருந்தது.

புதிய பிரதமரிடமிருந்து நமது எதிர்பார்ப்புகளை மேற்கண்ட அனைத்து அம்சங்களும் குறைத்து விட்டன என்பதே உண்மை. 2022 மற்றும் 2023ம் ஆண்டின் மழைக்காலப் பருவங்களின்போது எரிபொருள் அவசரநிலை உறையச் செய்யும் அம்சமாகும். ஐஎம்ஃஎப் அறிக்கை, ''மிக மோசமானவை இனிதான் வர உள்ளன'' என ஏற்கனவே எச்சரித்துள்ளதுடன் மேலும், ''எங்களின் சமீபத்திய உலக வளர்ச்சி குறித்த முன்கணிப்புகள் 2022ல் 3.2 சதவீதமாகவும் 2023ல் அது மெல்ல 2.7சதவீதமாகும் என்றும், 25சதவீத நிகழ்தகவுடன் அது 2 சதவீதத்திற்குக் கீழேயும் சரியலாம் என்பது மாற்றமின்றி அப்படியே உள்ளன; எண்ணற்ற பல மக்கள் 2023ம் ஆண்டை பொருளாதாரப் பின்னடைவு போல உணர்வர்''

''குறைந்தவருவாய்ப்பிரிவைச்சேர்ந்தபலநாடுகள்கடன் வலை துன்பத்திலோ அல்லது அதற்கு நெருக்கமாகவோ உள்ளன. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு இறையாண்மை கடன் நெருக்கடி அலையைத் தவிர்க்க அவசரமாகப்பொதுவானதிட்டச்சட்டகம்தேவைப்படுகிறது. காலம் விரைவாகக் கரைந்து கொண்டிருக்கிறது. உடனடியாகச் செயல்பட வேண்டிய தருணம் இது''

## ஏகாதிபத்திய அம்சம்

ஆழமாக எண்ணிப் பார்த்தால் ஒரு கேள்வி நம்முன் எழும். பிரிட்டன் போன்ற வல்லமையான பேரரசின் நாடு தொடரும் பணவீக்கத்தைச் சந்திக்கும் நிலையில், பொருளாதார நிலைத்தன்மை இன்மை, வேலையின்மை, குறைந்த ஊதியம் போன்ற பிரச்சனைகளில் ஏன் துன்பப்பட வேண்டும்? ஏற்கத்தக்கதாகத் தோன்றும் ஒரு பதில் யாதெனில், அன்று இந்தப் பேரரசின் பொருளாதாரப் பிரச்சனைகளின் தாக்கத்தைத் தாங்கிப் பிடிக்க, காலனிய நாடுகள் அதிர்ச்சிகளைத் தாங்கும் சுமை தாங்கிகளாக நடத்தப்பட்டதாக இருக்கலாம்.

மேலும் நாளும் காலனிய நாடுகளின் செல்வத்தின் பயன் மட்டும் மாமன்னர் ராஜாங்கத்துக்குக் கொள்ளையடித்து கொண்டு செல்லப்பட்டன அப்படித்தான் ஆவணச் சாட்சியங்கள் காட்டுகின்றன. பேரரசின் ஏகாதிபத்திய நாட்டிலும்கூட செல்வத்தின் பயன்கள் பணக்காரர்களுக்கே சென்றன, சாதாரண பிரிட்டன் மக்கள் நல்ல ஊதியத்திற்காக புலம் பெயர்ந்து சென்றனர். இதன் பொருள் பிரிட்டிஷ் முதலாளித்துவம் எப்போதுமில்லாத மாபெரும் சாம்ராஜ்யத்துடன், தான் அடிமைப்படுத்திய் நாடுகளின் மக்களுக்கும் அல்லது சொந்த மக்களுக்கும்கூட பொருளாதார நியாயம் வழங்கவில்லை என்பதுதான். ஆனால் குறுக்கும் நெடுக்குமான வர்த்தகப் பரிவர்த்தனைகள் மூலம் சாம்ராஜ்யமும் பிற சிறிய மன்னர்களும் நிலைத் தன்மையை அப்போது அனுபவித்தனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு காலனிய நாடுகளின் விடுதலை பிரச்சனை தீர்க்கப்பட்ட நிலையில் பேரரசு பிரிட்டனின் பொருளாதாரம் ஒரு சிறிய நாட்டின் பொருளாதாரம் போல மாறியது.

ஐரோப்பிய பொதுச் சந்தையில் நீடிப்பதா? இல்லையா? குவிந்துவிட்ட அரசின் பொதுக் கடனைத் திரும்பச் செலுத்துவது எப்படி என்பது போன்ற தனது சொந்த சமூக பொருளாதார அரசியல்பிரச்சனைகளைத்தீர்க்க முடியாமல் திணறியது. மேலும் முந்தைய பேரரசின் தனது சொந்த மக்கள் விசா மூலம் வெள்ளமாகத் திரும்பி வருவதை எப்படிக் கட்டுப்படுத்துவது, தனது பொருளாதாரத்திற்கு நிலைத்தன்மை அளிப்பதுஎப்படி? தற்போதையஇறுக்கமான பொருளாதாரத்தில் வருவாய்ச் சமத்துவமின்மையைக் கட்டுப்படுத்துவது எப்படி? மற்றும் 2024ல் பொதுத் தேர்தலைச் சந்திக்க உள்ள கன்சர்வேடிவ் கட்சிக்குப் பொதுமக்களின்வாக்குகளைஎப்படித்திரட்டுவதுபோன்ற பிரச்சனைகள் கன்சர்வேடிவ் கட்சி முன் நிற்கின்றன.

**சாம்ராஜ்ய சகாப்தத்தின் போது சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தவும் சமாளித்து நடத்திச் செல்லவும் பிரிட்டனில் புதிய அரசியல் கருத்துகள், கோட்பாடுகள் உருவானது மிகவும் புதிர்போன்ற குழப்பமான கேள்வி. ஆனால் சாம்ராஜ்யத்தை இழந்துவிட்ட பிறகு பிரிட்டனின் புதியன படைக்கும் இப்புதிய உத்வேகம் பலவீனமடையத் தொடங்கியதாகத் தோன்றுகிறது.**

அரசு ஆக்ஸ்போர்டு பிளாவட்நிக் பள்ளியில் பொருளாதாரம் மற்றும் பொதுக் கொள்கை துறையின் பேராசிரியர் பால் காலினர் தனது நூலில் ஆழமாக விமர்சிக்கிறார்: ''முதலாளித்துவம் பிளவுபட்டச் சமூகங்களை உருவாக்குகிறது, அச்சமூகங்களில் எண்ணற்ற மக்கள் கவலையும் பதற்றமும் நிறைந்த நிச்சயமற்ற வாழ்க்கையில் தள்ளப்படுவார்கள்...''

பொருளாதாரப் பெருமந்தம் நிகழ்வைத் தொடர்ந்த சகாப்தத்தின்போது நடைமுறைக்கேற்ற சாதுரியமான கொள்கைகள் முதலாளித்துவத்தை மீண்டும் சீரான பாதையில் கொண்டு வந்தது; மீண்டும் அவர்கள் அதனை முயற்சி செய்யலாம். இன்னும் நமது அரசியல் முறைமை அத்தகையக் கொள்கைகளை உண்டாக்கவில்லை. நமது பொருளாதாரம் போலவே அதுவும் செயல்படாத நிலையில் உள்ளது. பிரச்சனைகளுக்கான தீர்வைக் காரிய சாத்தியமான நடைமுறைகேற்ற வண்ணம் சிந்திக்கும் ஆற்றல் அவர்களை விட்டு அற்றுப் போய்விட்டதா என்ன?

பிரிட்டனின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் பிரிட்டிஷ் முறைமையில் மாற்றம் கொண்டு வர பிரதமர் ரிஷி சுனக் அவர்களால் இயலுமா? என்பதை பொறுத்திருந்துதான் காண வேண்டும்.

**– ஸ்ரீனிவாஸ் கந்தேவாலே**

**நன்றி: நியூஏஜ் (நவ.6 – 12)**

**தமிழில் : நீலகண்டன்**

# இஸ்கஃப் மாவட்ட மாநாடுகள்

சென்னை அண்ணா சாலை ''அன்பகம்'' அரங்கத்தில் இஸ்கஃப் 80வது ஆண்டு மற்றும் வழக்கறிஞர் என்டிவி நூற்றாண்டு விழா நவ. 13 அன்று க.தேசிங் தலைமையில் நடைபெற்றது.

குணசுந்தரி உட்பட ஐவர் குத்துவிளக்கேற்ற தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் விழா தொடங்கியது. க.தமிழ்மது வரவேற்றார். எம்.வரதன் நன்றி நவின்றார். கராத்தே மாஸ்டர் சீனிவாசனின் மாணவர்கள் கராத்தே கலை நிகழ்ச்சியின் சிறப்பம்சங்களைச் செய்து காண்பித்தனர். என்.டி.வியின் திருவுருவப் படத்தை கரிகாலன் திறந்து வைத்தார்.



தோழர்கள் வீ.ராஜமோகன், சந்திரசேகரன், ஆர்.சுசீலா ஆகியோரின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. வழக்கறிஞர் கே.சுப்பிரமணியன் அஞ்சலித் தீர்மானத்தை வாசித்தார்.

மலேசியாவில் தங்கம் வென்ற கராத்தே வீரச் சிறார்களுக்கும் குருதிக்கொடை தந்த இளைஞர்களுக்கும் ரஷ்ய கலாச்சார மைய இயக்குநர் கென்னடி ரொகாலேவ் பரிசுப் பொருட்கள் தந்து கௌரவித்தார். பி.செந்தில்குமார் மாவட்டச் செயலர் வேலை அறிக்கை முன்வைக்க ஏற்கப்பட்டது. திருவாளர்கள் விகேஜி, எஸ்.வி.ரமணி, நடராஜன் கமலாகரன்(குகன்), டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, கணபதி இளங்கோ, குடந்தை ஆர்.ராமமூர்த்தி, அசோக்குமார், ஜான் அலெக்ஸ், ஆர்.கிருஷ்ணகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநில பொதுச்செயலர் எஸ்.ராதாகிருஷ்ணன் நிறைவுரையாற்றினார்.

தலைவராக க.தமிழ்மது, செயலாளராக பி.செந்தில்குமார், பொருளாளராக எஸ்.ஆர். மாதவன் உள்ளிட்டோரும், தலைமைக் குழுவாக மூத்த வழக்கறிஞர் க.தேசிங், ஏ.எம்.இ.டி. பல்கலைக்கழக மூத்த துணை தலைவர் எஸ்.கரிகாலன், வி.கே.கோபாலன், எம்.எச்.ஏ.ஏ. செயலாளர் வழக்கறிஞர் ஆர்.கிருஷ்ணகுமார், வங்கி தொழிற் சங்க மூத்த தோழர் ரேணுகா தாமஸ், ஜி.ராஜகுமாரன், ராயல் ஏஜென்சி உரிமையாளர் கே.திருஞானசம்பந்தம், என்.எப்.டி.இ. – பி.எஸ்.என்.எல் தொழிற் சங்க மாநில செயலாளர் கே.நடராஜன், மக்கள் ஜனநாயகப் பேரவை தலைவர் சி.லோகநாதன் ஆகியோரும்,

துணை தலைவர்களாக குடந்தை கே.ஆர். ராமமூர்த்தி, மூ.சீனிவாசன், எஸ்.சிவகுமார், ஏ.ராஜ்தாஸ், ஜி.குணசுந்தரி, டி.அருள் சுந்தர், ஜெ.அருண், எஸ்.வெங்கடேசன் ஆகியோரும்,

துணை செயலாளர்களாக எம்.பி.சங்கர், ஜி.காமாட்சி, எம்.ராமச்சந்திரன், ஆர்.ராஜவேலு, ஜி.துரை பாபு, எம்.ரமேஷ் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

**சேலம்:** இந்திய கலாச்சார நட்புறவு கழகத்தின் சேலம் மாவட்ட14வது மாநாடு நவம்பர் புரட்சி தின விழா ஆர்.பி. மஹால் ஏ.விமலன், டி.ஆர்.ரத்தினம், எஸ்.டி.எஸ்.கனகராஜ் நினைவரங்கில் நடைபெற்றது. டாக்டர் ஆர்.சர்வோத்தமன், தாரை ஆ.குமரவேலு, ஏ.சுதந்திரம் ஆகியோர் தலைமை தாங்கினர். அஞ்சலி தீர்மானத்தை ஜி.மணிவண்ணன் முன்மொழிந்தார். மாநில துணை பொதுச் செயலாளர் எஸ்.அசோக்குமார் தேசிய கொடி ஏற்றி வைத்தார். ஆர்.எல். முத்துராஜகோபால் இஸ்கப் கொடி ஏற்றி வைத்தார். பூமிஷின் ஈ.ரவி வரவேற்று பேசினார்.

அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழக மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்தரநாத் துவக்கி வைத்து பேசினார். தமிழ் மாநில காங்கிரஸ் மேற்கு மாவட்ட தலைவர் கரு.வெ.சுசீந்திரகுமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.மோகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் மேவை.சண்முகராஜா, மாநகர் மாவட்ட காங்கிரஸ் பொது செயலாளர் தாரை கு.ராஜகணபதி, கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் கே.வி.ராஜேந்திரன், மாநில துணை தலைவர் வழக்கறிஞர் கே.சுப்பரமணியன், கலை இலக்கிய பெருமன்ற மாநில பொதுசெயலாளர் டாக்டர் த.அறம் ஆகியோர் மாநாட்டை வாழ்த்தி பேசினார்கள். மாவட்ட தலைவராக டாக்டர் ஆர்.சர்வோத்தமன், பொதுச்செயலாளராக டி.வி.கருணைதாஸ், பொருளாளராக ஈ.ஆர்கே உட்பட 53 பேர் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

மாநில பொதுச்செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன் மாநாட்டை நிறைவு செய்து உரையாற்றினார். எஸ்.பாலாஜி நன்றி கூறினார்.



கே.கதிரவன்

**தன்னாட்சிக் கல்லூரிகள் தங்களின் மாணவர் சேர்க்கை தேர்வு மற்றும் நிர்வாகத்தினை மேம்படுத்துவதற்கான விதிமுறைகளை உருவாக்கிக் கொள்வதற்கான வரைவு அறிக்கையை பல்கலைக்கழக மானிய குழுவின் செயலாளர் அக்டோபர் மாதம் 10ஆம் தேதி வெளியிட்டிருந்தார். வரைவு அறிக்கையின் படி தன்னாட்சி கல்லூரிகள் தாங்கள் விரும்பிய பட்டப்படிப்புகளையும் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களையும் பல்கலைக்கழகங்கள் மற்றும் மாநில அரசுகளின் கண்காணிப்பு இல்லாமல் தங்கள் கல்வி நிறுவனத்திற்கு அருகில் என்ன வேலை கிடைக்குமோ அதற்கு ஏற்ற கல்வியை (Job Oriented Course) வகுத்துக் கொள்ளலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

எவ்வளவு கட்டணத்தை கொள்ளையடிக்க முடியும் என்ற நோக்கத்தில் கல்லூரிகளை வணிக நோக்கங்களுக்காக உருவாக்கியுள்ளனர்.

### கல்வி கட்டண கொள்ளை

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான தன்னாட்சிக் கல்லூரிகள் தங்களுடைய கல்வி கட்டணத்தை பல்கலைக்கழகம் மற்றும் தமிழக அரசிடம் அனுமதி பெறாமல் தாங்களாகவே தன்னிச்சையாக பல மடங்கு உயர்த்தி உள்ளனர். குறிப்பாக இளங்கலை பி ஏ படிக்கும் மாணவர்களுக்கு வருடத்திற்கு அரசு நியமித்த கல்வி கட்டணமானது 650 லிருந்து 750 ரூபாய், ஆனால் அரசு உதவி பெறும் தன்னாட்சிக் கல்லூரிகள் தங்களின் உள்கட்டமைப்பை காண்பித்து மாணவர்களிடம் கிட்டத்தட்ட வருடத்திற்கு 30 ஆயிரம் ரூபாய்க்கு அதாவது பட்டப்படிப்பு முடிப்பதற்கு ஒரு லட்சம் ரூபாய் பெற்று வருகின்றனர்.

தற்பொழுது யூ.ஜி.சி.யின் வரைவு அறிக்கையின்படி அந்தந்த தன்னாட்சிக் கல்லூரிகளில் தங்களுடைய கல்விக் கட்டணத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்று அறிவித்திருப்பதன் மூலம் தன்னாட்சிக் கல்லூரிகள் தங்களின் கல்வி வியாபாரத்தை விரிவடைய செய்வதற்கு யூ.ஜி.சி. சான்றிதழ் வழங்குவதாக தோன்றுகிறது.

### சுய மதிப்பீடு மூலம் அதிக மதிப்பெண் அளிப்பது

பல்கலைக்கழகங்களில் தேர்வு முறையானது பருவத்திற்கு ஒன்று என இரண்டு முறை பருவ தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. தன்னாட்சிக் கல்லூரிகள் தாங்களாகவே தேர்வு நடத்தி வருகின்றனர். அதாவது நெருங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு பெறப்படும் கட்டணம் ஆகும். ஆனால் மாணவர் சேர்க்கையின் போது கல்வி கட்டணத்துடன் சேர்த்து தேர்வுக் கட்டணத்தையும் தன்னாட்சிக் கல்லூரிகள் பெற்று வருகின்றன. தற்போது பல்கலைக்கழக மானியக்குழு தேர்வு முறைகளையும் அதன் முடிவுகளையும் தன்னாட்சிக் கல்லூரிகள் முடிவு செய்துகொள்ளலாம் என அனுமதி அளித்தால் அது கல்வி கொள்ளையை ஊக்குவிப்பதற்கு வழிவகை செய்யும்.

### மாணவர் சேர்க்கையில் குளறுபடி


தமிழகத்தில் அரசு கலைக்கல்லூரிகள் அனைத்திற்கும் மாணவர் சேர்க்கை என்பது அரசு நிர்ணயித்த தேதிகளில் ஆரம்பித்து நிறைவு செய்கின்றனர். ஆனால் தன்னாட்சிக் கல்லூரிகள் எந்தவித அரசின் அனுமதிக்கும் கட்டுப்படாமல் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கும் கட்டுப்படாமல் மாணவர் சேர்க்கையை பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு முடிவு வந்த பிறகு உடனடியாக சேர்க்கையை ஆரம்பித்து விடுகின்றனர். தமிழகத்தில், பிளஸ் டு தேர்வு முடிவானது முன்பாகவும், பதினைந்து இருபது நாட்களுக்கு பிறகு மத்திய அரசின் பிளஸ் டு தேர்வு முடிவு வெளியிடப்படுகிறது, ஆனால் இந்த தன்னாட்சிக் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகள் மத்திய அரசின் தேர்வின் முடிவு வரும்வரை காத்திருக்காமல் தமிழக அரசின் முடிவு வந்த பின் உடனடியாக சேர்க்கையை துவங்கி விடுகின்றனர்.

ஆனால் தமிழக அரசின் அரசு கலை கல்லூரிகள் அனைத்தும் மத்திய அரசின் தேர்வு முடிவு வெளியான பிறகுதான் மாணவர் சேர்க்கையை துவங்குகின்றனர்.

# அறிவை வளர்க்காமல் சந்தையை நோக்கி செல்லும் உயர்கல்வி

### சந்தையும் உயர்கல்வியும்

உயர்கல்வியை படித்து முடித்து வெளிவரும் மாணவர்கள் வேலை வாய்ப்புக்கு ஏற்ற திறனை கற்றுணரவில்லை, ஆகையால் இவர்கள் வேலைவாய்ப்பை பெற முடியவில்லை என்ற புதிய வாதத்தால் புதிய கல்விக் கொள்கையின் வழிகாட்டுதலின்படி யூ.ஜி.சி. மாணவர்களுக்கு திறன் சார்ந்த கல்வியை அளிக்க வேண்டும் என்று கூறுகின்றது. திறன் சார்ந்த படிப்புகளை அளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆனால் இதுவரை நாம் கற்றுக் கொடுக்கின்ற கல்வி மூலம் எந்தவிதமான திறன் மேம்பாடு நம் மாணவர்களிடம் குறைவாக இருக்கின்றது என்பதற்கான சான்றுகள் இதுவரை இல்லை, அல்லது தற்போது இருக்கின்ற கல்விமுறையில் என்னவிதமான குறைபாடுகள் உள்ளன என்ற சான்றுகளும் நம்மிடம் இல்லை. ஏனென்றால் எவ்வித திறன் குறைபாடுகள் நம்மிடம் இருக்கிறது என்று தெரிந்துகொண்டால் அதற்கேற்ற பாடங்களை நம்மால் வகுக்க முடியும்.



### பாடத்திட்டங்களை மறு சீரமைப்பு செய்தல்

அரசு உதவி பெறும் தன்னாட்சிக் கல்லூரிகள் தன்னிச்சையாக பல்கலைக்கழக அனுமதி பெறாமல் பாடத்திட்டங்களை உருவாக்க இயலாது. ஏனென்றால் ஒவ்வொரு கல்லூரியும் அவர்கள் தன்னிச்சையாக பாடங்களை உருவாக்கினால் அது கல்வியை வியாபார பொருளாக மாற்றிவிடும். கல்வி வியாபாரிகள் சந்தையில் அதற்கு ஏற்றார்போல் மாணவர்களின் எதிர்காலத்தை பற்றி கவலைப்படாமல் பாடங்களையும் விற்று வருவார்கள். தற்பொழுது பெரும்பாலான கல்லூரிகளில் சில துறையில் மாணவர் சேர்க்கை இல்லை என்று மூடப்பட்டுள்ளது. குறிப்பாக 50 வருடங்களுக்கு முன்பாக முதன்மை படிப்பாக இருந்த தத்துவ இயல் (Philosophy) போன்ற பட்டப் படிப்புகள் தற்பொழுது பல கல்லூரிகளில் மூடப்பட்டுள்ளது.

அதுபோல் பெரும்பாளான தனியார் கல்லூரிகளில் அடிப்படை அறிவியல் (Basic Science) படிப்புகலான தாவரவியல், விலங்கியல், இயற்பியல் போன்ற படிப்புகள் உருவாக்கப்படவில்லை. தன்னாட்சிக் கல்லூரிகள் கல்விக்கட்டணம் எதில் அதிகமாக பெறலாம் என்ற குறிக்கோளுடன் பணம் ஈட்டக்கூடிய மைக்ரோ பயாலஜி, பயோ டெக்னாலஜி, நேனோ டெக்னாலஜி, கம்ப்யூட்டர் சயின்ஸ், பி காம், பிபிஏ போன்ற படிப்புகளை அளிக்கின்றனர். அதாவது அவர்களின் நோக்கமானது மாணவர்களுக்கு அறிவை வளர்ப்பது அல்ல, தாங்கள் கல்வி என்ற பெயரில் பல்கலைக்கழகங்களில் நடத்தப்படும் தேர்வில் அனைத்து பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரி பேராசிரியர்களும் ஒன்றுசேர்ந்து ஒரு பொதுவான இடத்தில் இருந்து வினாக்கள் திருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றது, இதில் எந்தவித பாரபட்சமும் இல்லாமல் வினாத்தாள்கள் மதிப்பீடு செய்து தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றது, ஆனால் தன்னாட்சிக் கல்லூரிகள் தங்களின் மாணவர்களின் வினாக்களை தாங்களாகவே அளித்து, தாங்களே மதிப்பீடு செய்து தேர்வு முடிவுகளை வெளியிடுகின்றனர், இதன் காரணமாக பல்கலைக்கழகத்தால் மதிப்பீடு செய்யும் மாணவர்களுக்கும், தன்னாட்சிக் கல்லூரிகளில் மூலமாக மதிப்பீடு செய்யும் மாணவர்களுக்குமான மதிப்பீடுகளில் பெரிய வேறுபாடு காணப்படுகிறது, அதாவது தன்னாட்சிக் கல்லூரிகளில் படித்து வெளிவரும் மாணவர்கள் பெரும்பாலும் 80 சதவிகிதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்று வெளி வருகின்றனர், ஆனால் பல்கலைக்கழகங்களில் நடத்தப்படும் மாணவர்களின் மதிப்பீடு குறைவாக காணப்படுகின்றது. இதன் மூலம் தெரிவது என்னவென்றால், தன்னாட்சிக் கல்லூரிகள் தங்களின் வருமானத்திற்காக மாணவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் வழங்கப்படுவது தெளிவாகிறது.

### பருவ தேர்வு மூலம் கட்டணக் கொள்ளை

தமிழகத்தில் பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் அரசு நிர்ணயித்த தேர்வு கட்டணம் ஒரு பாடத்திற்கு (Paper) 75 ரூபாய், தற்பொழுது பெரும்பாலான தன்னாட்சிக் கல்லூரிகளில் அரசு நிர்ணயித்த தேர்வு கட்டணத்தை விட நான்கு மடங்கு அதிகமாக ஒரு பாடத்திற்கு 300 ரூபாயிலிருந்து 400 ரூபாய் வரை பெற்று வருகின்றனர். அதிலும் தேர்வு கட்டணம் என்பது தேர்வு

இதனால் அரசு கலை கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை என்பது மிகவும் தாமதமாக வருவதால் பெரும்பாலான மாணவர்கள் அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் தன்னாட்சி கல்லூரிகளை நோக்கி பயணப்பட்டு அதிகப்படியான கல்வி கட்டணத்தை செலுத்தி கல்லூரியில் சேருகின்றனர். தற்பொழுது பல்கலைக்கழக மானியக் குழு வரைவு அறிக்கை படி தன்னாட்சிக் கல்லூரிகள் தாங்களாகவே மாணவர்கள் சேர்க்கையை நடத்திக் கொள்வதற்கான விதிமுறைகளை உருவாக்கி மேலும் மேலும் தன்னாட்சிக் கல்லூரிகள் தங்களின் விருப்பப்படி சமூக நீதிக்கு எதிராக செயல்படக் கூடிய சூழலை உருவாக்கியுள்ளது.

இட ஒதுக்கீடு முறைக்கு எதிரான வரைவு அறிக்கை

மாணவர் சேர்க்கைக்கு தாங்களே விதிமுறைகளை உருவாக்கி கொள்ளலாம் என்று பல்கலைக்கழக மானியக்குழு கூறியிருப்பது சமூக நீதிக்கு எதிராக தன்னாட்சிக் கல்லூரிகளை திசை திருப்பும் நடவடிக்கையாக பார்க்க வேண்டி உள்ளது. ஏனென்றால் தற்பொழுது பெரும்பாலான அரசு உதவி பெறும் தன்னாட்சிக் கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் நடத்தும் தன்னாட்சிக் கல்லூரிகள் இட ஒதுக்கீடு முறையை பெரும்பாலும் பின்பற்றுவதில்லை. அதிலும் சில படிப்புகளுக்கு கல்விக் கட்டணம் அதிகம். ஆகையால் கிராமப்புற ஒடுக்கப்பட்ட மாணவர்கள் விருப்பப்படவில்லை என்ற காரணத்தைக் கூறி பெரும்பாலான தன்னாட்சிக் கல்லூரிகள் சில குறிப்பிட்ட படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கை முறையைப் பின்பற்றுவதில்லை, அதுபோல் மாலை நேர வகுப்புகள் (II shift) முழுவதும் நிர்வாக படிப்புகள் ஆக இருப்பதால் படிப்புகளுக்கு கல்விக் கட்டணம் அதிகம் என்று கூறி இட ஒதுக்கீடு முறை முறையாக பின்பற்றப்படுவதில்லை. இப்பொழுது பல்கலைக்கழக மானியக்குழு மாணவர் சேர்க்கைக்கான விதிமுறைகளை தாங்களே உருவாக்கிக் கொள்ளலாம் என்று கூறுவது மீண்டும் மீண்டும் தன்னாட்சிக் கல்லூரிகள் அரசின் சட்டத்திட்டங்களை விட்டு விலகி செல்லக்கூடிய சூழ்நிலையை பல்கலைக்கழக மானியக்குழு ஏற்படுத்துகின்றது.

ஆகவே தற்பொழுது பல்கலைக்கழக மானியக் குழு வழங்கியுள்ள இந்த வரைவு அறிக்கையானது முழுக்க முழுக்க தன்னாட்சி கல்லூரிகளை தனியார்மயமாக்கும் மற்றும் வணிக மயமாக்கும் நோக்கத்திற்கு வழிவகை செய்கின்றது.

தொடர்புக்கு: 8667338638

# நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகத்தை தனியாரிடம் தள்ளிவிடாதீர்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அக்டோபர் 20,2022ஆம்தேதி வெளியிட்ட அரசாணை 152 நகர்ப்புற உள்ளாட்சி கட்டமைப்பினை தனியார்வசம் தள்ளிவிடும் நோக்கம் கொண்டது. தற்போது இத்துறையில் உள்ள நிரந்தரப் பணியாளர்கள் ஓய்வு பெற்றதும் புதிய பணியாளர்களை நியமனம் செய்ய தடைவிதிக்கிறது. சுகாதாரம் மற்றும் தூய்மைப் பணிகளையும், நிர்வாகப் பணியாளர்களையும் வெளிமுகமை (Out sourcing as carrices) மேற்கொள்ள வழிவகை செய்துள்ளது. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநரின் உத்தரவுப்படி உள்ளாட்சியில் ஒப்பந்தங்கள் மூலம் அமர்த்தப்பட்ட பணியாளர் ஒருவர், ஒரு வேலை நாளில் எட்டு கிலோ மீட்டர் தூரம் சுத்தம் செய்ய வேண்டும் என்ற முதுகை முறிக்கும் வேலைப்பளுவை ஏற்றி, பெற்றுவந்த ஊதியத்தை சரிபாதியாக வெட்டிக் குறைத்துள்ளது. மக்கள் சுகாதாரம் மற்றும் தூய்மைப் பணிகளை அரசு கைகழுவி விட்டு, தனியாரிடம் ஒப்படைக்க முயலும் அரசாணை 152ஐ திரும்பப் பெற்று, சுகாதாரக் கட்டமைப்பை அரசின் கட்டுப்பாட்டில் மேலும் வலுப்படுத்தி, விரிவுபடுத்த வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# நளினி உள்ளிட்டோரை விடுதலை செய்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற நளினி, பி.ரவிச்சந்திரன் உள்ளிட்ட ஆறு பேர்களையும் உச்சநீதிமன்றம் விடுதலை செய்து உத்தவிட்டுள்ளது. இந்த வழக்கில் தண்டனை பெற்ற கு.பேறிவாளன் கடந்த மே மாதம் விடுதலை செய்யப்பட்டார்.

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற அனைவரும் முப்பதாண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருப்பதை கருத்தில் கொண்டு அவர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு கோரிக்கை வைக்கப்பட்டது. தமிழக மக்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசுக்குப் பலமுறை கடிதங்கள் அனுப்பியுள்ளது.

சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தின் மீதும், தமிழக அரசின் கடிதங்கள் மீதும் அரசியலமைப்பு அதிகாரம் பெற்ற ஆளுநரும், ஒன்றிய அரசும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு காலத்தில் விடுதலை செய்ய தவறிவிட்டனர். இதன் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட சட்டப் போராட்டத்தில் உச்சநீதிமன்றம் நளினி உள்ளிட்ட ஆறு பேர்களையும் விடுதலை செய்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# கிரீஸ் நாட்டில் எழுச்சிமிகு வேலைநிறுத்தப் போராட்டம்

கிரீஸ் நாட்டில் கடந்த 9 ஆம் தேதி தேசம் தழுவிய பொது வேலைநிறுத்தப் போராட்டம் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது.

“இன்றைய தினம் நடைபெறும் வேலைநிறுத்தப் போராட்டம் ஒரு எச்சரிக்கை செய்தி ஆகும். ஒவ்வொரு தொழிற்சாலையிலும், துறையிலும் மற்றும் பிராந்தியத்திலும் ஏற்பட்டுள்ள தொழிலாளர் எழுச்சியை அறிவிக்கும் செய்தி ஆகும். தங்களின் வாழ்வுரிமை மற்றும் வேலைவாய்ப்பு உரிமை ஆகியவற்றுக்கான போராட்ட களத்தில் உழைக்கும் மக்கள் முக்கிய பங்காற்ற வேண்டியது இப்போது அவசியமாகிறது.” என்று அனைத்து தொழிலாளர் புரட்சிகர முன்னணி (ரிகிவிணி) விடுத்துள்ள செய்திக்குறிப்பில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

வேலைநிறுத்த நாளன்று கிரீஸ் நாட்டின் அனைத்து நகரங்களிலும் வர்க்க அடிப்படை கொண்ட தொழிற்சங்கங்கள் நடத்திய பேரணிகளில், பொதுத்துறை மற்றும் தனியார்துறை ஊழியர்கள், சுயதொழில் புரிவோர், சிறு வணிகர்கள், பெண்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஓய்வூதியதாரர்கள் என்று உழைக்கும் மக்கள் பல்லாயிரக்கணக்கில் அணிதிரண்டு பங்கேற்றனர்.

வேலைநிறுத்தப் போராட்டம் வெற்றியடைய வேண்டும் என்ற முனைப்புடன் அதிகாலையில் இருந்தே போராட்டத் தளங்களில் அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஊதியம் மற்றும் ஒய்வூதிய உயர்வு, நிரந்தர பணியுரிமையை உத்தரவாதப்படுத்தும் கூட்டு ஒப்பந்தம், நியாயமான கட்டணத்தில் மின்சாரம் மற்றும் பொதுமக்களுக்கான அடிப்படை பொருள்கள், மக்கள் விரோத வரிச்சுமையை ஒழித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளைப் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் முழங்கினர்.

பெருநிறுவனங்களின் இலாபத்திற்காக உழைக்க வேண்டிய மோசமான சூழலில் மக்களைச் சிக்க வைக்கக்கூடிய, போர், சுரண்டல், பசி, ஏழ்மை ஆகியவற்றைத் தீவிரமாக்கக்கூடிய மக்கள் விரோத கொள்கைகளைத் தூக்கியெறிய தொழிலாளர்கள் அணிதிரண்டு போராட வேண்டும் என்று அனைத்து தொழிலாளர் புரட்சிகர முன்னணியில் இடம்பெற்றுள்ள வர்க்க அடிப்படை கொண்ட தொழிற்சங்கங்கள் அறைகூவல் விடுத்துள்ளன.

பள்ளி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் பெருந்திரளாக இப்பேரணிகளில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இந்த எழுச்சிமிகு வேலைநிறுத்தப் போராட்டத்தில் கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டிமிட்ரிஸ் குத்சும்பாஸ் கலந்து கொண்டு பேசுகையில், “கிரீஸ் மக்களும் அவர்களின் போராட்ட இயக்கமும், பெரு மூலதனத்தின் சேவகர்களான ஆளும் கட்சியின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு அடிபணிந்து மவுனமாக இருக்க மாட்டார்கள் எனும் செய்தியை இன்று நடைபெறும் தேசம் தழுவிய மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டம் கிரீஸ் மற்றும் ஐரோப்பா முழுவதற்கும் தெரிவிக்கிறது.” என்று கூறினார்.

# தருமபுரி மாவட்ட வி.தொ.ச. பேரவைக் கூட்டங்கள்



தருமபுரி மாவட்டத்தில் தமிழ்மாநில மாநில விவசாய தொழிலாளர் சங்க பேரவைக் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. நல்லம்பள்ளி ஒன்றியம் ஏலகிரி ஊராட்சி பழனிகவுண்டன் கொட்டாய் கிராம சங்க பேரவைக் கூட்டத்திற்கு எம்.பழனி தலைமை தாங்கினார். இதில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன், ஒன்றிய பொறுப்பு செயலாளர் என்.முருகேசன், துணை செயலாளர் எம்.சின்னராஜ், ஜி.சம்பத் மற்றும் கிராம சங்க உறுப்பினர் கலந்துக்கொண்டனர். சா.சேட்டு தலைவராகவும், எம்.பழனி செயலாளராகவும், எம்.பழனியப்பன் பொருளாளராகவும், சோனியாவிஜயன் துணைத் தலைவராகவும், சந்திராமணி துணைச் செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

**ஜீவாநகர்:** நல்லம்பள்ளி ஒன்றியம், பாலஜங்கமன அள்ளி கிராம ஊராட்சி ஜீவாநகர் கிராம சங்க பேரவைக்கூட்டம் சங்க மாவட்டக்குழு உறுப்பினர் எம்.பழனியம்மாள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன், ஒன்றிய பொறுப்பு செயலாளர் என்.முருகேசன், ஒன்றியக்குழு உறுப்பினர் ஜி.சம்பத் ஆகியோர் கலந்து கொண்டனர். சங்க தலைவராக எம்.பழனியம்மாள், செயலாளராக க.பெரியசாமி, பொருளாளராக எம்.அர்ஜுனன், துணைத்தலைவராக ப.செல்வம், துணைச்செயலாளராக வே.அலமேலு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**சினகாம்பட்டி:** தருமபுரி ஒன்றியம் அதகப்பாடி ஊராட்சி சின்னகாம்பட்டி கிராம சங்க பேரவைக்கூட்டம் கிராம சங்க தலைவர் ர.இலட்சுமி தலைமையில் நடைபெற்றது. இதில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன், ஒன்றிய செயலாளர் ஜி.பச்சாகவுண்டர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை.மாதையன் மற்றும் சம்பத் உள்ளிட்ட கிராம சங்க உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர். தலைவராக ர.இலட்சுமி, செயலாளராக ப.பச்சியப்பசாமியார், பொருளாளராக மா.பெருமாவு, துணைத்தலைவராக மா. ராஜாமணி, துணைச்செயலாளராக ப.கோவிந்தன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# கோயில் நில குத்தகை உரிமை பறிக்கும் நடவடிக்கை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தமிழ்நாடு முழுவதும் கோயில், மடம் மற்றும் தர்ம ஸ்தாபனங்களுக்கு சொந்தமான நிலங்களில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் காலங்காலமாக குத்தகை சாகுபடி செய்து வருகிறார்கள். குத்தகை விவசாயிகளுக்கு கோயில் நிர்வாக செயல் அலுவலர்கள் முறையான ஆவணங்கள் வழங்காத நிலையில் இயற்கை சீற்றக் காலங்களில் அரசு வழங்கும் கடன் தள்ளுபடி உள்ளிட்ட நிவாரண உதவிகளையும், நலத்திட்டப் பயன்களை குத்தகை விவசாயிகள் பெற முடியாத அவலநிலை தொடர்கிறது.

செயல் அலுவலர்களின் ஒப்புதல் அல்லது ஆட்சேபணையில்லா சான்றிதழ் கிடைக்கப் பெறாததால் விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும் கடன் சுமையில் தத்தளிக்கும் கோயில் நில குத்தகை விவசாயிகள் வாழ்வாதாரத்தை பறிக்கும் முறையில் குத்தகை விவசாயிகள் வசம் உள்ள நிலங்களை 'பொது ஏலம்' விடுவதாக கோயில் செயல் அலுவலர்கள் நாளேடுகளில் விளம்பரம் செய்து வருகின்றனர். குறிப்பாக திருத்துறைப்பூண்டி அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் திருக்கோயில் தக்கார் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர் நாளேடுகளில் வெளியிட்ட அறிவிப்பு இயற்கை சீற்றத்தை எதிர்கொண்டு நிற்கும் காவிரி பாசன பகுதி நில குத்தகை விவசாயிகளிடம் கடுமையான பதற்றத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

வழிவழியாக கோயில் நில குத்தகை பெற்றுள்ள விவசாயிகள் உரிமையை பறிக்கும் பொது ஏலம் அறிவிக்கும் செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இது தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறையும், தமிழ்நாடு அரசும் தலையிட்டு கோயில் நிர்வாகத்தின் ஏல அறிவிப்புகளை ரத்து செய்யுமாறும், கோயில் நிலங்களில் குத்தகை சாகுபடி செய்து வரும் விவசாயிகளின் உழுவடை உரிமையை பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதுடன் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட ஆண்டுகளுக்குரிய குத்தகை பாக்கியை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டுமென தமிழ்நாடு அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.


## 2023ம் ஆண்டிற்கான காலண்டர் மற்றும் சிறப்பிதழ் தயாராகிறது...

காலண்டர் மற்றும் சிறப்பிதழுக்கான விளம்பரங்கள் நவ.25 ஆம் தேதிக்குள் ஜனசக்திக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

காலண்டர் விளம்பரம், விற்பனை தேவை குறித்து 50% முன்பணம் செலுத்தி தேவையான பிரதிகளை நவ.25 ஆம் தேதிக்குள் உறுதி செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டு விளம்பரம் மற்றும் விற்பனை பாக்கி வைத்துள்ள மாவட்டங்கள் பாக்கியை உடனடியாக செலுத்திய பின்பே இந்த ஆண்டிற்கான பிரதிகளுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| காலண்டர் விளம்பரம் | – | ரூ.20,000 |
| காலண்டர் பிரதி விலை | – | ரூ.15.00 |
| சிறப்பிதழ் பிரதி விலை | – | ரூ.15.00 |

– ஆசிரியர் குழு

# கால்பந்தாட்ட வீராங்கனை பிரியா உடலுக்கு அஞ்சலி

சென்னையில் அறுவை சிகிச்சை செய்து கால் அகற்றப்பட்ட கால்பந்து வீராங்கனை மற்றும் கல்லூரி மாணவி பிரியாவுக்கு (கியூன் மேரிஸ் அரசினர் கலைக் கல்லூரி முதலாம் ஆண்டு வகுப்பு படித்துக் கொண்டிருந்தார்) முறையான மருத்துவ சிகிச்சை அளிக்காமல் அவருடைய உயிர் பிரிந்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்ட குழு சார்பாக அவருடைய இல்லத்துக்கு சென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, பெரம்பூர் தொகுதி செயலாளர் இரா.கோட்டி சுரேஷ், மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஏ.சுப்பிரமணி, எஸ்.பாஸ்கர், எஸ்.நாகரா, கிளை செயலாளர்கள் எம்.வெங்கடேசன், எஸ்.பார்த்திபன், எஸ்.ஆனந்த், ஜெகதீஷ், பரமசிவம், சுப்பு மற்றும் தோழர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். மறுநாள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைசெயலாளர் மு.வீரபாண்டியன் பிரியாவின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தார்.

# மீனவத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.6000 ஓய்வூதியம் வழங்கிடுக!

தமிழ்நாடு ஏஐடியூசி மீனவ தொழிலாளர் சங்கத்தின் மதுரை புறநகர் மாவட்டக் குழு கூட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யா.ஒத்தக்கடை அலுவலகத்தில் சங்க மாவட்டத் தலைவர் முத்துக்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் 2018 – 2019 ஆண்டுகளில் மீனவ தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்ட நல வாரிய படிவங்களுக்கு உடனடியாக நலவாரிய அட்டை வழங்கிடவும், மீனவ தொழிலாளர்கள் அனைவரையும் மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்த்திடவும், மீன் விற்பனையாளர்களுக்கு மீன்பிடி தடைகால நிவாரணம் வழங்கிடவும், 60 வயதான மீனவத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமாக மாதம் ரூ. 6,000 வழங்கிடவும், மதுரை மாவட்டத்தில் உள்ள மீன் மார்க்கெட்டுகளில் கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, மீன்களை பாதுகாக்க குளிர்சாதன பெட்டி, மின்சார வசதி உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து மாவட்ட செயலாளராக போதும் பொண்ணு, துணைத் தலைவராக முத்துக்குமார், மாவட்டப் பொறுப்பாளராக ஜெகநேசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இக்கூட்டத்தில் சிபிஐ மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் பா.காளிதாஸ், புறநகர் மாவட்டச் செயலர் முத்துவேல், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் சேது, தமிழ்நாடு ஏஐடியுசி மீனவ தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் சின்னத்தம்பி, கஸ்தூரி, ரவிவர்மன், மலையாளம், குண்டுரன், வளர்மதி, நீலமோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கட்சித் தோழர்கள் குடும்ப திருமண விழாவில் தலைவர்கள் வாழ்த்து

கோவை நீலம் ஊரைச் சேர்ந்தவர் பி.பாண்டியன் காந்திமதி தம்பதியினர் கட்சித் தோழர்கள் ஆவர். அவர்களது மகள் வழக்கறிஞர் பா. தீபிகா இவரும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், இளைஞர் பெருமன்றம் உள்ளிட்ட அமைப்புகளில் பணியாற்றி வருகின்றனர்.

தீபிகா கணேசன் திருமணம் கோவையில் நடைபெற்றது. இவர்களது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் கே.சுப்பராயன், தேசிய குழு உறுப்பினர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, முன்னாள் மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஜே. ஜேம்ஸ், மௌ.குணசேகர், சு.பழனிசாமி, மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், பி.எஸ். ராமசாமி, சி.பத்மநாபன், யு.கே. சிவஞானம், அஸ்ரப்அலி, மு.வ. கல்யாணசுந்தரம், சி.முருகன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர். இதில் கட்சி நிதியாக ரூ. 5000 வழங்கப்பட்டது. நிகழ்ச்சிகளுக்கு முன்னாள் கண்ணம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் பி.மௌனசாமி தலைமை தாங்கினார்.

அதேபோல் அன்னூர் ஒன்றியம் ஆர்த்திக்குட்டை கிளை செயலாளர் எம். சுப்பிரமணியம் முத்தம்மாள் தம்பதியினரின் மகன் எஸ்.அருண்குமார் கே. பூமணி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி இரும்பொறை சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்றது. இதில் சிபிஐ தேசிய குழு உறுப்பினர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, மாவட்ட துணை செயலாளர் ஜே.ஜேம்ஸ், மௌன குணசேகர், மாவட்ட பொருளாளர் சி. தங்கவேல், காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆர். துரைசாமி, யூ.ஆர். பழனிசாமி உள்ளிட்ட தோழர்கள் பங்கு பெற்று வாழ்த்துக்களை தெரிவித்தனர். இதில் கட்சி நிதியாக ரூபாய் ஆயிரம் வழங்கப்பட்டது.

# கட்சிக் கிளை தொடக்கம்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகரில் உள்ள பார்வதி நகர் பகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை துவக்கப்பட்டது. கட்சியில் இணைந்த அனைத்து தோழர்களுக்கும், ஒசூர் மாநகர கட்சியின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஆட்டோ சங்க மாவட்ட மாநாடுகள்







60 வயது முடிந்த ஆட்டோ ஓட்டுனர்களுக்கு நலவாரியம் மூலம் மாதம் ரூ.6000 ஓய்வூதியம் வழங்க வேண்டும், ஓலா, ஊபர், ராபிட்டோ போன்ற கார்பரேட் நிறுவனங்களுக்கு மாற்றாக தமிழக அரசு ஆட்டோ ஆப் உருவாக்க வேண்டும், பெட்ரோல், டீசல், கியாஸ் போன்றவற்றில் மீனவர்களுக்கு மானியம் வழங்குவது போல் ஆட்டோ தொழிலாளர்களுக்கும் மானியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஆட்டோ தொழிலாளர் சம்மேளனத்தில் மாவட்ட மாநாடுகள் நடைபெற்றன.

**மத்திய சென்னை:** மத்திய சென்னை மாவட்ட முதல் மாநாடு வில்லிவாக்கத்தில் நடைபெற்றது. ஏஐடியூசி மாநிலத் துணைத் தலைவர் ஏ.எஸ்.கண்ணன், சிபிஐ மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, கட்டிட சங்க மாநில செயலாளர் ஆர். துரைசாமி ஆகியோர் வாழ்த்தி பேசினர். தலைவராக மு.சம்பத், பொதுச் செயலாளராக ப.மாரியப்பன், துணைத் தலைவராக பா.ரவி, பொருளாளராக மு.சாமிநாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்

**திருவாரூர்:** திருவாரூர் மாவட்ட ஆட்டோ ஓட்டுனர் சங்க இரண்டாவது மாநாடு திருத்துறைப்பூண்டியில் நடைபெற்றது. மாநாட்டை துவக்கி வைத்து மாநில பொதுச் செயலாளர் ப.மாரியப்பன் சிறப்புரையாற்றினார். திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உலகநாதன், சிபிஐ மாவட்ட செயலாளர் வை. செல்வராஜ், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் சந்திரசேகர் ஆசாத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தலைவராக கே. மணி, பொதுச் செயலாளராக வி. ரமேஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**தேனி:** தேனி மாவட்ட ஆட்டோ வேன் ஓட்டுனர் சங்க மாவட்ட பேரவை கூட்டத்தை தொடங்கி வைத்து மாநில பொதுச் செயலாளர் பி மாரியப்பன், திருவள்ளூர் மாவட்டம் எம்.பி.குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தலைவராக அழகுராஜா, செயலாளராக வி. பாண்டி, துணைத் தலைவராக சவரிநாதன், சின்னசாமி, துணைச் செயலாளராக சிவா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்

**காஞ்சி – செங்கல்பட்டு:** காஞ்சி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்டோ மற்றும் ஊர்த்தி ஓட்டுநர் சங்க பேரவை. திருப்போரூர் விருந்தினர் மாளிகையில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் ப.மாரியப்பன் துவக்கிவைத்து பேசினார். தலைவராக பரந்தாமன், செயலாளராக ஜெகதீசன், பொருளாளராக டி.சுரேஷ் உள்ளிட்டோர் தேர்வு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகளை வாழ்த்தி ஏ ஐ டி யு சி மாவட்ட பொதுச் செயலாளர் ஜஹாங்கீர், மாவட்ட துணைத் தலைவர் தேவராஜ், திருவள்ளூர் மாவட்டம் எம். பி. குமார், ஏஐடியூசி மாநிலக் குழு உறுப்பினர் ஆதிமூலம் ஆகியோர் பேசினர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் மாவட்ட பேரவை கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது தலைவராக பாலகிருஷ்ணன், செயலாளராக செந்தில், பொருளாளராக மலைச்சாமி, துணைத் தலைவர் சரவணன் உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்வுசெய்யப்பட்டனர். ஏ ஐ டி யு சி மாவட்ட பொது செயலாளர் தில்லைவனம் சிறப்புரை ஆற்றினார்.

**ராமநாதபுரம்:** ராமநாதபுரம் மாவட்ட ஆட்டோ ஓட்டுனர் சங்க பேரவை கூட்டம் நடைபெற்றது. இதில் ஏஐடியூசி பொதுச் செயலாளர் என். கே.ராஜன், மீனவர் சங்க செயலாளர் பி. ஆர். செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தலைவராக சண்முகராஜன், செயலாளராக செந்தில், பொருளாளராக ஜீவானந்தம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**தர்மபுரி:** தர்மபுரி மாவட்ட ஆட்டோ சங்க 13வது மாவட்ட மாநாடு நடைபெற்றது. மாநாட்டை சங்க மாநில பொதுச் செயலாளர் ப. மாரியப்பன் துவக்கி வைத்துபேசினார். மாநாட்டை வாழ்த்தி சேலம் வி. முருகன், ஏ ஐ டி யு சி மாவட்டத் தலைவர் மாதேஸ்வரன், மாவட்ட பொது செயலாளர் கே மணி, துணைத் தலைவர் சுதர்சன், உள்ளாட்சிப் பணியாளர் மனோகரன், கட்டிட சங்கம் மணி ஆகியோர் பேசினார். மாவட்ட தலைவராக முனுசாமி, செயலாளராக பி. கே. கந்தசாமி, பொருளாளராக பி.சக்திவேல் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டை நிறைவு செய்து சிபிஐ மாவட்ட செயலாளர் கலைச்செல்வன் உரையாற்றினார்.

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி மாவட்ட பேரவை கூட்டம் ஒசூர் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. பேரவையை துவக்கி வைத்து மாநில பொது செயலாளர் பி. மாரியப்பன் பேசினார். சேலம் முருகன், ஏ ஐ டி யு சி மாவட்ட துணை செயலாளர் செந்தில் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தலைவராக பில்லப்பா, மாவட்ட பொதுச் செயலாளராக மாரியப்பன், பொருளாளர் லியோ கார்க் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர் . மாநாட்டை நிறைவு செய்து விவசாயிகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் லகுமய்யா உரையாற்றினார்.

# வனத்துறையினரைக் கண்டித்து இளைஞர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்

தேனி மாவட்டம் ஹைவேவிஸ் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட மேகமலை வனச்சரகத்தில் உள்ள சுமார் ஏழு தேயிலைத் தோட்ட எஸ்டேட்டுகள் இருக்கிறது. இந்த எஸ்டேட்டுகளில் சுமார் இரண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட எஸ்டேட் குடியிருப்புகளில், சுமார் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் குடும்பத்துடன் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மேகமலை வனச்சரகத்தில் பணியாற்றுகிற காமராஜ், மாயாண்டி உள்ளிட்டோர் மது போதையில் தேயிலை தோட்டத்தில் பணியாற்றக்கூடிய பெண்களிடம் அத்துமீறி உன் போன் நம்பரை கொடு, உன்னிடம் அவ்வப்போது பேசிக் கொள்கிறேன் என்றும் அதேபோல் எஸ்டேட் குடியிருப்புகளில் வசிப்பவர்களிடம் நீங்கள் மரங்கள் வெட்டியதாக, கஞ்சா கடத்தியதாக பொய் வழக்கு பதிவு செய்து உங்கள் வாழ்க்கையை நாசமாக்கி விடுவேன் என்று மிரட்டி, வலுக்கட்டாயமாக ஒவ்வொரு வீட்டிற்கும் ரூபாய் 3000 வீதம் சுமார் 2 லட்ச ரூபாய் வரை வசூல் செய்து இருக்கின்றனர். தீபாவளி தினத்தன்று ஒவ்வொரு குடும்பத்திற்கும் 50ரூபாய் முதல் 200ரூபாய் வரை தீபாவளி கட்டாய வசூல் வேட்டையாடியுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு மதுபோதையில் கல்லூரி மாணவரை கடுமையாக தாக்கி, சுமார் இருபதா யிரம் ரூபாய் மதிப்புள்ள செல் போனை அடித்து பிடுங்கி உடைத்து எறிந்து விட்டுள்ளனர்.

எனவே வனத்துறையில் பணியாற்றும் காமராஜ் மற்றும் மாயாண்டி ஆகியோர் தொடர்ந்து சட்டவிரோதமாக பல்வேறு வகையான பிரச்சினைகளை செய்து அங்கு வாழும் மக்களை அச்சுறுத்தி, மிரட்டி அதிகார துஷ்பிரயோகம் செய்து வரும் இவர்கள் மீது துறைரீதியாக உரிய விசாரணை செய்து துரித நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் நவ. 14 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஒன்றியச் செயலாளர் சு.சரவணபுதியவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் இரா.தமிழ் பெருமாள், மாவட்டத் துணைத் தலைவர் த.வீரையா, அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் செ.ஆனந்த், மாவட்டக்குழு உறுப்பினர் ம.விக்கி, சி.சதீஷ் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் வனத்துறையினரின் அடாவடித்தன நடவடிக்கைக்கு எதிராக முழக்கமிட்டனர்.

# கட்டடத் தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடுகள்




**கோவை:** தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் கோவை மாவட்ட மாநாடு கோவை காந்திபுரத்தில் உள்ள கமலம் துரைசாமி மஹாலில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு தலைமை குழுவாக காளப்பட்டி கே. செல்வராஜ், எஸ்.பி. தியாகராஜன், ஆர்.பாலகிருஷ்ணன், என். சோமசுந்தரம், எஸ். ராணி ஆகியோர் செயல்பட்டனர்.

மாநாட்டு கொடியை சிவானந்த காலனி மூத்த தோழியர் சரஸ் அம்மாள் ஏற்றி வைத்தார்.

சங்கத்தின் மாநில செயலாளர் சேலம் எம். முனுசாமி மாநாட்டை துவக்கி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார். மாநில செயலாளர் அம்பத்தூர் துரைசாமி சிறப்புரை ஆற்றினார். ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட கவுன்சில் பொதுச் செயலாளர் சி.தங்கவேல் வாழ்த்துரை வழங்கினார். அமைப்பு நிலை அறிக்கையை மாவட்ட பொதுச் செயலாளர் என். செல்வராஜ் முன்வைத்து பேசினார். மாவட்ட பொருளாளர் சி.நந்தினி வரவு செலவு கணக்கை முன் வைத்தார்.

சங்கத்தின் கௌரவத் தலைவராக காளப்பட்டி கே.செல்வராஜ், மாவட்டத் தலைவராக எஸ்.பி.தியாகராஜன், துணைத் தலைவர்களாக ஆர்.பாலகிருஷ்ணன், சி.நந்தினி, ஜே.கலா ஆகியோரும், பொதுச் செயலாளராக என். செல்வராஜ், துணை பொதுச் செயலாளராக கோட்டை ஆர்.நாராயணன், செயலாளர்களாக மேட்டுப்பாளையம். எல். செல்வம், வால்பாறை ஏ.டி.கே. தனபாண்டியன், பணப்பட்டி மருதாசலம் ஆகியோரும், பொருளாளராக என்.சோமசுந்தரம் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் 59 பேர் கொண்ட மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

**ஈரோடு:** தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் ஈரோடு (தெற்கு) மாவட்ட 5வது மாநாடு நவ. 13 அன்று பெருந்துறை "ஜீவா இல்லத்தில்", 'தோழர்கள் வி.ராஜேஸ், பி.எஸ். பூபதி, ஏ.சி.பூபதி, ஏ.தியாகராஜன் நினைவரங்கில்' மாவட்டத் தலைவர் எஸ்.சின்னசாமி தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டிற்கு பி.கே.சேகர், கே.ராஜு, கே.மாயவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க மாவட்டத் துணைத் தலைவர் மூத்த தோழர் மா.நாகப்பன் கொடியேற்றி வைத்தார். மாவட்டத் துணைச் செயலாளர் எம்.பாபு வரவேற்புரை ஆற்றினார். அஞ்சலி தீர்மானத்தை, மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.ராஜ்குமார் முன்மொழிந்தார்.

இந்தியத் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன், ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் ஜி.வெங்கடாசலம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத்தலைவர் சி.எம்.துளசிமணி, கட்சியின் மாவட்டப் பொருளாளர் என்.ரமணி, பெருந்துறை ஒன்றிய செயலாளர் வி.சி.செந்தில் குமார், சங்க ஈரோடு வடக்கு மாவட்டப் பொருளாளர் கே.ஆர்.கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினர்.

சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் கோவை என்.செல்வராஜ் சிறப்புரை ஆற்றினார். சங்க மாவட்டச் செயலாளர் சி.சுந்தரம் வேலையறிக்கை சமர்பித்தார். சங்க மாவட்டப் பொருளாளர் எம்.குணசேகரன் வரவுசெலவு கணக்குகளை முன்வைத்தார். இம் மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்டத் தலைவராக எம்.குணசேகரன், மாவட்டச் செயலாளராக எம்.பாபு, மாவட்டப் பொருளாளராக எஸ்.ராஜ்குமார், துணைத் தலைவர்களாக மா.நாகப்பன், சி.சுந்தரம், எஸ்.சின்னசாமி, துணைச் செயலாளராக கே.ராஜூ ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி கேட்டு ஆர்ப்பாட்டம்




மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள திருவள்ளுவர் சிலை முன்பு, மதுரை மாவட்ட பெண்கள் கூட்டமைப்பு சார்பில், பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட பெண் புகாரைப் பதிவு செய்யாமல் அலைக்கழித்த சத்திரப்பட்டி நத்தம் காவல் நிலைய அதிகாரிகள் மீதும், சாணார்பட்டி மகளிர் காவல் நிலைய அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழ்நாடு பெண்கள் இயக்கத்தின் மாநில தலைவர் தொ.ஆரோக்கிய மேரி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் புறநகர் மாவட்ட செயலர் நாகஜோதி கண்டன உரையாற்றினார். மேலும் வழக்கறிஞர், மாதர் சங்கத்தினர், பெண்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை அருகே 6 பேர் உயிரிழந்த வெடி விபத்து

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே வடக்கம்பட்டி அழகுசிறை கிராமத்தில் வெள்ளையன் மனைவி அனுசியா தேவி என்பவருக்கு சொந்தமான வி.பி.எம். என்ற பெயரில் பட்டாசு தொழிற்சாலை ஒன்று செயல்படுகிறது. இந்த பட்டாசு ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டதில் இரண்டு குடோன்களில் பணியாற்றிக் கொண்டிருந்த பெண்கள் உட்பட 6 பேர் பலியாகினர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் பா.காளிதாஸ், மதுரை புறநகர் மாவட்டச் செயலர் முத்துவேல், மாவட்ட குழு உறுப்பினர்கள் சந்தனம், சுப்பிரமணி, கல்யாணி, ஜெயக்குமார் மற்றும் நாகஜோதி ஆகியோர் ஆறுதல் கூறினர்.

# கணினி உதவியாளர்கள் கோரிக்கையை நிறைவேற்றுக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

தமிழ்நாடு முழுவதும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பணிபுரிந்து வரும் கணினி உதவியாளர்கள் பணிநிரந்தரம் செய்ய வலியுறுத்தி, நவம்பர் ஒன்றாம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் 17 ஆண்டுகளாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்ட நிர்வாகத்தில் முக்கிய பங்காற்றி வருகிறார்கள். இந்தக் கணினி உதவியாளர்களை, அரசின் இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்வது என தமிழ்நாடு அரசு 2017ஆம் ஆண்டு அரசாணை வெளியிட்டது. இந்த அரசாணையை ஊரக வளர்ச்சித்துறை இதுவரை அமலாக்கவில்லை. பணியில் சேர்ந்து 17 ஆண்டுகளாகி விட்டதால் பணியாளர்கள் அனைவரும் 45 வயதை தாண்டிய நிலையை எட்டியுள்ளனர். இந்த நிலையிலும் பணிநிரந்தரம் என்பது நடைபெறவில்லை எனில், எதிர்கால வாழ்க்கை பாதுகாப்பு இல்லாத அவலநிலைக்கு தள்ளப்படுவார்கள் என்பதை அரசின் கவனத்துக்கு சுட்டிக்காட்டி, ஊரக வளர்ச்சித்துறை கணினி உதவியாளர்கள் கோரிக்கை மீது மாண்புமிகு முதலமைச்சர் தலையிட்டு, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றி தருமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# மூத்த தோழர் ஆர்.தேவராஜை சந்தித்து தலைவர்கள் ஆறுதல்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆர்.தேவராஜ் உடல்நலக் குறைவு ஏற்பட்டு வீட்டில் ஓய்வில் இருக்கிறார்.

அவரை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் கே. சுப்பராயன், மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம், எஸ்.எஸ்.குளம் ஒன்றிய செயலாளர் சி.மோகன், ஜீவபாரதி உள்ளிட்டோர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

# திண்டுக்கல் மூத்த தோழர் எஸ்.ஜெயமணி மறைவு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாவட்டத்தின் மூத்த தோழரும் ஏஐடியூசி மாவட்டத் தலைவருமான தோழர் எஸ்.ஜெயமணி நவ.13 அன்று இயற்கை எய்தினார். தோழரின் இறுதி ஊர்வலம் மற்றும் நல்லடக்கத்தில் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் க.சந்தானம், கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர்கள், சிபிஐஎம், தி.க., ஏஐடியூசி, வி.ச., வி.தொ.ச., தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம், என்.ஐ.எப்.டபிள்யூ, இளைஞர் பெருமன்றம், சிஐடியூ, ஜனநாயக கட்டுமான சங்கம், எம்.எல்.எப், எல்.பி.எப்., ஐ.என்.டி.யூ.சி., யூடியூசி உள்ளிட்ட அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.

# லஞ்சம் வாங்கிய அதிகாரி மீது நடவடிக்கை கோரி ஆர்ப்பாட்டம்




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு அனைத்து கட்சி ஆர்ப்பாட்டம் நடந்தது. லஞ்சம் பெற்ற பஞ் சாயத்து உதவி இயக்குனர் உமாசங்கர் மீது நடவடிக்கை எடுக்கவும், கன்னிசேரி ஊராட்சியில் வரவுசெலவில் முறைகேடு நடந்ததன் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், விருதுநகர் புதிய பேருந்து நிலையத்தை செயல்படுத்தக் கோரியும் தலைவர்கள் பேசினார்கள். சிபிஐ மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் தலைமை வகித்தார். மநீம காளிதாஸ், சமக மணிமாறன், தபுக விடியல் வீரப்பெருமாள் , விசிக செல்வம் , சிபிஐ ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் கலந்துகொண்டு பேசினார்கள். பின் மாவட்ட ஆட்சியர் மேகநாதரெட்டியிடம் மனுவை அளித்தனர். மனுவை பெற்றுக் கொண்ட ஆட்சியர், பஞ்சாயத்து உதவி இயக்குநர் உமாசங்கர் பணியிலிருந்து விடுவிக்கப் பட்டதாகவும், கன்னிசேரி ஊராட்சி கணக்குகளை தணிக்கை செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 96. நோக்கம்

**உன்னத நோக்கம தாக்கும் அருளுடைமை**
**ஆன்ற அறிவதாக்கும் அன்பு.**


உயர்ந்த நல்ல நோக்கம், அருள்மனதை உண்டாக்கும். அன்பு கொள்வதால் நல்ல அறிவுடைமை ஏற்படும்.

**அன்பாய் அருளாய் அனைத்துமாய் ஆதல்முறை**
**ஒன்றாய் உதித்தல் இல.**

முதலில் அன்பும், அதன்வழி அருளும், அதன்பின் அனைத்து நற்செயல்களுமாய் உண்டதால் இயற்கை, மூன்றும் ஒரு சேர உண்டாகாது (அருளென்னும் அன்பீன் குழவி – திருக்குறள்).

# நூல் நயம்

## நான் ஏன் நாத்திகன் ஆனேன்?




விடுதலைப் போராட்ட மாவீரன் பகத்சிங் எழுதிய நான் ஏன் நாத்திகன் ஆனேன் என்ற புகழ்பெற்ற இந்நூலை எஸ். ஏ. பெருமாள் தமிழில் மொழிபெயர்த்துள்ளார் .

பகத்சிங்சிலையிலிருந்து போது அங்கு தலைமை வார்டராக இருந்த, இறை நம்பிக்கையாளரான சர்தார் சிங் என்பவர், பகத்சிங்கடம் சீக்கியர்களின் புனித நூலான ‘குத்கா’வை கொடுத்து, இந்த கடைசி நேரத்திலாவது இதைப் படித்து கடவுளை நினைத்துக் கொள் என்று கூறினார். அதற்கு பகத்சிங் அவரை தந்தையைப்போல் தான் பாவிப்பதாகவும், ஆனால் தனது வாழ்நாளில் கடவுளை பற்றி சிந்திக்கவில்லை என்றும் கூறினார்.

மற்றொரு சுதந்திரப் போராட்ட வீரரான பாபா ரந்தீர்சிங் பகத்சிங்கிடம் கடவுள் நம்பிக்கை ஏற்படுத்த கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார். இப்படி பகத்சிங்கிடம் இறை நம்பிக்கை ஏற்படுத்த நினைத்தவர்களுக்கு பதில் கூறும் வகையில் பகத்சிங் எழுதிய கட்டுரையே நான் ஏன் நாத்திகன் ஆனேன் என்னும் இந்த நூல்

“மத நம்பிக்கைகள், வழிபாடு குறித்து கர்வமாய் எதிர்க்கும் சுபாவம் எனக்கு இருந்தது. அது தனிப்பட்ட முறையில் அல்ல, அது சரியானது தான். கர்வம் அல்லது அகங்காரம் என்பது ஒருவரின் தகாத குணமாய் இருக்கலாம். அதுதான் என்னை நாத்திகனாக்கியதா அல்லது நான் கவனமாய் படித்த விஷயங்களில் இருந்து கடவுளை நம்பவில்லையா? என்பது குறித்து இங்கு விவாதித்தாக வேண்டும். தன்னம்பிக்கையும் கர்வமும் எவ்வாறானவை “

“நான் கர்வத்தினால் கடவுளை மறுத்து நாத்திக கோட்பாடுகளை பின்பற்றவில்லை. என்னை மகத்துவமிக்க சக்தியாக, கடவுளின் போட்டியாளனாக கருதியதும் இல்லை . இளம் வயதிலிருந்து நான் கடவுளை நம்புவதில்லை. எனது தோழர்களிடம் பழகுவதற்கு முன்பே நான் நாத்திகனாகி விட்டேன். ஒரு மனிதனின் தன்னம்பிக்கை கர்வம் என்கிறார்கள். அது வருத்தமும் துயரமும் தருவதாக உள்ளது”.


நான் கடவுளை நம்பாததற்கு கர்வம் காரணம் அல்ல என்றால் வேறு சில காரணங்கள் இருக்கக்கூடும். ஆம், காரணம் இருக்கிறது. என்னை பொறுத்தவரை எந்த மனிதனுக்கும் விவேக சக்தி இருக்குமானால் சூழ்நிலைகளை அவனால் வெல்ல முடியும். நடைமுறை ஆதாரங்கள் குறைவாக இருப்பினும் தத்துவம் முக்கிய இடம் வகிக்கிறது. சமூக வளர்ச்சிக்காக நிற்கும் எந்த ஒரு மனிதனும் பழைய நம்பிக்கைகளை விமர்சித்து,அவற்றின் மீதான நம்பிக்கைகளை கைவிட்டு எதிர்த்து நிற்க வேண்டும்.

“நடப்பில் இருக்கும் ஒவ்வொரு அம்சத்தின் மீதும், மூலை முடுக்கெல்லாம் அலசி ஆராய வேண்டும். அதன் பின் ஏதாவது புதுமை அல்லது தத்துவத்தை நாட வேண்டும் இது வரவேற்கப்பட வேண்டும். அதில் ஏதேனும் தவறுகள் இருந்தால் சரி செய்து கொள்ள முடியும். ஆனால் எதிலும் குருட்டு நம்பிக்கை வைப்பது ஆபத்தானதாகும். அது ஒரு மனிதனின் மூளையை முடமாக்கி பிற்போக்கில் தள்ளிவிடும். ஒரு யதார்த்தவாதி பழைய நம்பிக்கைகளை முழுமையாக எதிர்த்து நிற்க வேண்டும். இல்லையேல் அவனது வீழ்ச்சியை தவிர்க்க முடியாதது”. என தனது நாத்திக கோட்பாடு ஏன் மனித சமூகத்திற்கு இன்றியமையாதது என்பதை இந்நூலில் விளக்கி உள்ளார். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்

– சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | பகத்சிங், தமிழில்: எஸ்.ஏ.பெருமாள் |
| பக்கம் | : | 24 விலை: 25 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50 |

## ஜனசக்தியில் வெளியான தோழர் ஆர்.கே. கட்டுரைகள்




நாட்டின் அன்றாட அரசியல் நிலவரங்கள், சமூக நிகழ்வுகள், பொருளாதார மோசடிகள், இந்துத்துவா தில்லுமுல்லுகள் என ஜனசக்தியில் ஆர்.கிருஷ்ணமூர்த்தி என்கிற (ஆர் கே) எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

காஷ்மீர் மாநிலத்தில் கத்துவா என்ற கிராமத்தில் 8 வயது ஆசிபா என்னும் சிறுமி கோவில் கருவறைக்குள் வைத்து எட்டு பேர் கொண்ட கும்பலால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, கொலையும் செய்யப்பட்டார். இதில் பிரதான குற்றவாளி சஞ்சிராம் என்கிற இந்துத்துவா வெறியன். இந்துத்துவ அமைப்பின் செல்வாக்கு காரணமாக காவல்துறையால் இதில் வழக்கு கூட பதிவு செய்ய முடியவில்லை. இதிலும் மற்றொரு கொடுமை என்னவென்றால், கொலை செய்யப்பட்ட சிறுமியின் உடலை அடக்கம் செய்வதற்கு கூட விடாமல் துரத்தி அடித்தனர். இதை நாறிப்போன இந்துத்துவா காரி உமிழும் வரலாறு என சரியாகவே பதிவு செய்திருக்கிறார்.

மோடி ஆட்சியில் தொழிலதிபர்கள் என்கிற பெயரில் வங்கிகளில் அடிக்கப்பட்ட கொள்ளைகள், அவற்றின் விவரங்கள். இனிமேலும் இந்த கொள்ளை நீடித்தால் மக்கள் பணம் தப்புமா?என்கிற கேள்வியும் எழுப்பி உள்ளார். வங்கிகள் இணைப்பு என்கிற பெயரில் மக்கள் பெறுகிற சேவைகளை குறைக்காதீர் என்றும் குரல் கொடுக்கிறார். வளர்ச்சி என்கிற பெயரில் எட்டு வழி சாலைகளை போட்டு ஏழை, பாழை மக்களை.நஞ்சை, புஞ்சை நிலங்களை விட்டு வெளியேற்றுவது நியாயம் தானா? என்றும் கேட்டு உள்ளார். வளர்ச்சி வேண்டும் ஆனால் அது விவசாயிகளை அழித்து அல்ல என ஓங்கி குரல் கொடுக்கிறார். ஆர் கிருஷ்ணமூர்த்தி என்கிற( ஆர் கே) அகவை எண்பதாவது நிறைவை ஒட்டி வெளியிடப்பட்ட சிறப்பு வெளியீடு இது.

–இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | ஆர்.கிருஷ்ணமூர்த்தி (ஆர்.கே ) |
| பக்கம் | : | 120 |
| வெளியீடு | : | டி 3 வது மாடி, ஜெயின் அஸ்வர்யா, 49, ரங்கா ரோடு, மயிலாப்பூர், சென்னை 4 |

சுழலும் உலகம்

# கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் 22–வது சர்வதேச கூட்டம்: பிரதான நெறிமுறைகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளும்



கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் 22 வது சர்வதேச கூட்டம் கியூபா நாட்டின் தலைநகரான ஹவானாவில் கடந்த மாதம் 27 முதல் 29 வரை நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தேசிய செயலாளர் டாக்டர் கே நாராயணா இந்தச் சர்வதேச நிகழ்வில் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

ரஷ்ய—உக்ரைன் போர், உலகளாவிய பொருளாதார நெருக்கடி, அதிகரித்து வரும் வேலையின்மை, விலையேற்றம், பருவநிலை மாற்றத்தின் விளைவுகள், பொது சுகாதாரம் என்று பிரச்சனைகள் தீவிரமாகி, உலக மக்களைத் தேச எல்லைகள், மொழி, மதம், இனம், சாதி என்ற பாகுபாடுகள் இன்றி பாதித்து வருகிறது. இந்தச் சூழலில், பல்வேறு நாடுகளைச் சார்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் பிரச்சனைகளை எதிர்கொண்டு முறியடித்து, சோசலிசத்தை நோக்கி முன்னேற, பரஸ்பரம் தங்கள் நடைமுறை அனுபவங்களை இந்தக் கூட்டத்தில் பகிர்ந்து கொண்டனர்; வருங்கால கடமைகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் குறித்தும் கலந்துரையாடினர். இந்த நிகழ்வின் முக்கியத்துவம் கருதி ‘ஜனசக்தி’ (நவ 6—12) இதழில் தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது. அதன் நீட்சியாக, இந்தக் கூட்டத்தில் வகுத்தளிக்கப்பட்ட பிரதான நெறிமுறைகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய தகவல் பின்வருமாறு:

1) அமைதியை வலியுறுத்தியும், ஏகாதிபத்திய போர், அணு ஆயுதம் உள்ளிட்ட பேரழிவு ஆயுதம், அந்நிய இராணுவ தளங்கள், நேட்டோ உள்ளிட்ட ஏகாதிபத்திய இராணுவ கூட்டமைப்புகளுக்கு எதிர்ப்பு ஆகியவற்றை வலியுறுத்தி மக்களை அணிதிரட்ட வேண்டும்.

‘போர் வேண்டாம்’ எனும் முழக்கத்தை முன்வைத்து செப்டம்பர் 21 ஆம் நாளை உலக சமாதான தினமாகக் கொண்டாட வேண்டும்.

உலக சமாதான கழக கூட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும்.

உக்ரைன் பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காண வலியுறுத்தும் ஆக்கப்பூர்வமான மற்றும் நடைமுறைக்குப் பொருத்தமான தீர்மானத்தை முன்னெடுக்க வேண்டும்.

2) நாம் ஏற்றுக் கொண்டுள்ள இலட்சியங்கள் மற்றும் கோட்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல இளைஞர்களின் தீவிர அரசியல் பங்கேற்பை உறுதிப்படுத்த வேண்டும்.

அதற்காக, ஆகஸ்ட் 12 — சர்வதேச இளைஞர் தினத்தைக் கொண்டாட வேண்டும்.

நவம்பர் 17 — சர்வதேச மாணவர் தினத்தைக் கொண்டாட வேண்டும்.

3) மார்க்சிய லெனினிய தத்துவார்த்த கோட்பாடுகளையும், அதன் நடைமுறைக்கான கருத்தாக்கங்களையும், சோஷலிச விழுமியங்களையும் பரஸ்பரம் ஆய்ந்து அறிந்து, புரிந்து கொள்ள, பரப்புரை செய்திட கருத்தரங்கங்களையும், இன்ன பிற நிகழ்வுகளை நேரடியாகவும், இணைய வழி மூலமாகவும் நடத்த வேண்டும். இந்த இலக்கை அடைய, பின்வரும் நினைவேந்தல் உள்ளிட்ட நிகழ்வுகளை மேற்கொள்ளலாம்:

சோவியத் ஒன்றியம் உருவாக்கப்பட்டதன் நூற்றாண்டு கொண்டாட்டம்.

கார்ல் மார்க்ஸின் 140 வது நினைவு நாள் அனுசரிப்பு (மார்ச் 14, 1883)

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை பிரசுரம் செய்யப்பட்டதன் 175 ஆம் ஆண்டு கொண்டாட்டம் (பிப்ரவரி 21, 1848)

கியூபாவில் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 முதல் 12 வரை இடதுசாரி இயக்கங்கள் மற்றும் கட்சிகளின் தத்துவார்த்த பிரசுர வெளியீடுகள் முதலாவது சர்வதேச கூட்டம் நடைபெறவுள்ளது.

4) பாசிசம், கம்யூனிச எதிர்ப்பு, சோவியத் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியம் ஆற்றிய மகத்தான வரலாற்றுப் பங்களிப்புகளைப் பற்றிய தவறான தகவல்கள் ஆகியவற்றைக் கண்டிப்பது, சிலி நாட்டில் அதிபர் சால்வடோர் அலந்தே ஆட்சிக் கவிழ்ப்பின் ஐம்பதாவது ஆண்டு நினைவேந்தல்.

5) சர்வதேச மகளிர் தினம் (மார்ச் 8) மற்றும் சர்வதேச தொழிலாளர் தினம் (மே 1) ஆகியவற்றை முன்னிட்டு மக்களைப் பெருந்திரளாக அணிதிரட்ட வேண்டும்.

6) தொழிற்சங்க உரிமை, ஊதிய உயர்வு, மேம்பட்ட பணிச் சூழல் மற்றும் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடி வரும் தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் ஆகியோரின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து சர்வதேச அளவிலான ஒத்துழைப்பு மற்றும் பரப்புரை மேற்கொள்ள வேண்டும்.

7) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை வலியுறுத்தி நடைபெறும் போராட்ட இயக்கங்களில் தீவிரமாகப் பங்கேற்க வேண்டும்; முதலாளித்துவ உற்பத்தி மற்றும் நுகர்வு முறையை மறுதலிக்க வேண்டும்.

8) அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்பு, பொருளாதார தடைகள், ஏகாதிபத்திய தலையீடுகள் ஆகியவற்றை எதிர்த்துப் போராடும் அனைத்து மக்களுக்கும் ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

9) தங்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்தவும், கிழக்கு ஜெருசேலத்தைத் தலைநகரமாகக் கொண்ட ஒரு இறையாண்மைமிக்க சுதந்திர நாட்டை அடைந்திடவும், இஸ்ரேல் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடி வரும் பாலஸ்தீன மக்களுக்கான ஆதரவை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

10) ஏகாதிபத்திய அமைப்புகளுக்கு எதிராக சர்வதேச அளவில் செயல்பட்டு வரும் அமைப்புகளை, குறிப்பாக, உலக தொழிற்சங்க சம்மேளனம், உலக சமாதான கழகம் உள்ளிட்ட அமைப்புகளை மேலும் பலப்படுத்த வேண்டும்.

11) தங்களது ஜனநாயகப்பூர்வ அரசியல் உரிமைகள் மறுக்கப்படுவதை எதிர்த்துப் போராடி வரும் கம்யூனிஸ்டுகள் மற்றும் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி போராடி வரும் அனைத்து பிரிவு மக்களுக்கும் ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

12) சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் 23 வது கூட்டத்தைத் துருக்கி நாட்டில் வெற்றிகரமாக நடத்திட, உலகின் அனைத்து பிராந்தியங்களில் உள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளுக்கு இடையேயான கலந்துரையாடல், ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை பலப்படுத்த வேண்டும்.

எளிய மக்களின் உப்புமாவும், இட்டிலியும் பாடு பொருளாகின 'ஒழிக நீ உப்புமாவே!' எனும் கவிதை அரசியல்வாதிகளின் 'கோதுமை' இறக்குமதியைக் கிண்டல் செய்தது.




இரா.காமராசு

# அன்றாடங்காய்ச்சிகளைப் பாடிய பாணன்







கவிதை எனக்கொரு கைவாள் மார்பில்
கவசம் எனக்கு வாய்மை
புவியில் தீமைகள் வீழ நான்
போர் செயும் ஓர்படை வீரன்..

எனப் போர்ப்பரணி பாடிய கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் (1.9.1921 26.5.1999) சிறந்த கவிஞர்; கலைஞர். இலக்கியத்தின் வழியாக இயக்கத்துக்கு வந்தவர்கள் பலர். இவர் இயக்கத்திலிருந்து இலக்கியத்தைத் தேர்ந்து கொண்டவர். காந்தியத்திலிருந்து கம்யூனிசம் தழுவியத் தலைமுறையைச் சேர்ந்தவர். கவிஞர், சிறுகதையாளர், நாவலாசிரியர், நாடகக்காரர், பேச்சாளர், இதழாளர், திரைப்படக் கலைஞர், இயக்கவாதி எனப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

பொள்ளாச்சி, கோயம்புத்தூர், சென்னை ஆகிய ஊர்களில் தன் இயக்கப் பணிகளைச் செய்தவர்.

தோழர் கே.பாலதண்டாயுதம் அவர்களால் உந்துதல் பெற்று பொதுவுடைமைக் கொள்கைகளை வரித்துக் கொண்டவர். சென்னை பாலன் இல்லத்தில் பத்திரிகையாளராக 'கம்யூன்' வாழ்வை நடத்தியவர். ஜனசக்தி, தாமரை இதழ்களுக்கு அளப்பரியத் தொண்டாற்றினார்.

அவர் பல துறைகளில் புலமை கொண்டிருந்தாலும் அவருக்கு 'அடையாகி' நிற்பது 'கவிஞர்' என்பது தான். இசையில் ஆர்வமிக்கவர். சந்தப் பாடல் புனைவதில் வல்லவர். இவரின் மேடைக் கவிதைகள் புகழ் பெற்றவை. மேடைகளில் தன் இனிய குரலால் பாடவும் செய்வார்.

கம்யூனிஸ்ட்களின் புகழ்பெற்ற திரை முயற்சியான 'பாதை தெரியுதுபார்' திரைப்படத்தில் இசை மேதை எம்.பி.சீனிவாசன் இசைக் கோர்வையில் அற்புதக் கலைஞர் டி.எம். சௌந்தரராசன் குரலுக்கு இவர் எழுதிய,

'சின்னச் சின்ன மூக்குத்தியாம்
சிவப்புக் கல்லு மூக்குத்தியாம்'

பாடல் மக்கள் மனங்களைக் கொள்ளைக் கொண்ட திரைக்காவியப் பாடல். இப்பாடல் முழுவதும் நாட்டார் மரபில் அமைந்திருக்கும்.

"அள்ளிச் சொருகிய கொண்டையிலே
எந்தன் ஆவி சிறையுண்டு இருக்குதடி
துள்ளித் திரிகிற ரெண்டுகண்ணு அத
சொல்லிச் சிரிக்குது ஒன்னுக் கொண்ணு"

என்றவாறு எளிய மனிதர்களை, தொழிலாளர்களைத் தன் கதாநாயர்களாக்கி கவிதைகள் படைத்தார். கவியரங்கக் கவிதைகளில் எளிய மக்களின் உப்புமாவும், இட்டிலியும் பாடு பொருளாகின 'ஒழிக நீ உப்புமாவே!' எனும் கவிதை அரசியல்வாதிகளின் 'கோதுமை' இறக்குமதியைக் கிண்டல் செய்தது. 'உப்புமாவைக் கைது செய்' என்பது எள்ளலின் உச்சம். அதே போல,

வட்டில் என்னும் குளந்தனிலே
வாத்துக் கோழி போல் மிதந்த
இட்டிலியே ஏனிளைத்துப் போனாய்! நீ
எந்தப் பயல் மீது காதல் ஆனாய்?

எனும் கவிதையில் இளைத்துப் போன இட்லியின் அவலத்தைப் பாடுபவர், 'மொளகாப் பொடி பூசி எண்ணெ யிலே தலைமுழுகி' என மிளகாய்ப் பொடி எண்ணெய்யைச் சாட்சியாக்குகிறார்.

"புன்னைமரத்து கொம்பை வளைத்து
தொட்டில் தொங்குது அதில்
பூவினை ஒத்த மேனிபடைத்த குழந்தை தூங்குவது"

இப்படி வாழ்க்கையை மிக அருகிலிருந்து அதை எழுத்தாக்கியவர் கே.சி.எஸ்.

"என்னுடன் பிறந்தவன் நீ வியத்நாம்" போன்ற உணர்ச்சிகரமான கவிதைகளையும் அவர் படைத்தார்.

அவரின் கவிதைகள் கொண்டாடப்பட்ட அளவு கதைகள், நாடகங்கள் பரவலாக சென்று சேராதது குறையே. கே.சி.எஸ். தான் எழுதுவதை விட பிறரை எழுதச் செய்து மகிழ்ந்தார்.

தாமரையில் தொடக்கக் காலம் முதல் அவர் தொடர்பில் இருந்து பல பணிகளைச் செய்தார். எனினும் 1983 டிசம்பர் இதழில்தான் 'பொறுப்பாசிரியர்' என்ற பொறுப்பினை ஏற்றார். 1994 சனவரி வரை இப்பொறுப்பில் இருந்தார்.

பல மூத்த , இளைய எழுத்தாளர்களைத் தாமரையில் எழுதச் செய்தார். வல்லிக்கண்ணன், என்.ஆர்.தாசன், தஞ்சைப்ரகாஷ் உள்ளிட்டப் பலர் பங்களிப்பு செய்தனர். கேள்வி பதில் பகுதி தொடங்கப்பட்டது. மாவட்ட மலர்கள் கொண்டுவரப்பட்டன. ஆய்வுக் கட்டுரைகள் மீண்டும் வெளிவரத் தொடங்கின. எழுத்தாளர் திலகவதி ஐ.பி.எஸ். தன் 'கல்மரம்' நாவலை, தாமரையில் தான் தொடர் கதையாக எழுதினார். 1991 டிசம்பர் தொடங்கி 1994 சனவரி வரை 26 மாதங்கள் தொடராக அது வந்தது. இந்நாவல் சாகித்திய அகாதெமி விருதும் பெற்றது. கட்டடத் தொழிலாளர்களின் வாழ்வியலைப் பேசிய இத்தொடரை கே.சி.எஸ். வெளிப்பட்டு உற்சாகப்படுத்தினார். எனது முதல் கவிதையை 1988ல் கே.சி.எஸ் தான் தாமரையில் வெளியிட்டார். 1991ல் தஞ்சாவூர் மாவட்ட மலராகத் தாமரையைக் கொண்டுவந்தோம். அதற்காக எழுத்தாளர் கரிச்சான் குஞ்சுவை பேட்டி கண்டோம். அது அவரின் கடைசி நேர்காணலாகவும் அமைந்தது.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தில் நீண்ட காலம் செயல்பட்டார். தமிழ்நாடு முழுவதும் சென்று பேசினார். 1978ல் திருப்பூரில் நடைபெற்ற மாநாட்டில் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1988ல் எழுத்தாளர் பொன்னீலன் பொறுப்பேற்கும் வரை சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர் தலைமைக்குழுவில் இருந்து வழி காட்டினார்.

கே.சி.எஸ் சென்ற தலைமுறை கம்யூனிஸ்ட் ஒழுக்கமும் ஒழுங்கும் இருகண்கள் எனப் போற்றியவர். மிகுந்த சனநாயகவாதி. இளைஞர்களை உற்சாகப்படுத்தியவர். தான் ஏற்றப் பொறுப்புகளை கடமை உணர்ச்சியோடு நிறைவேற்றியவர். எவ்வித பெரிய அங்கீகாரங்கள் கிடைக்காத போதும் அதைப் பற்றி மனக்குறை எதுவும் இல்லாதவர். கதராடையில் இருக்கும் அவர் உள்ளமும் மென்மையானது.

சாவினுக்கஞ்சேன் சாகேன் இந்தச்
சடலம் எனக்கொரு சட்டை
சேவகனாகவே இருப்பேன் நான்
திரும்பவும் இவ்விதம் பிறப்பேன்!

எனக் காலம் முழுவதும் பாட்டாளிகளின் சேவகனாக விளங்கினார். பாட்டாளிகளைப் பாடிய பாட்டுக் குயிலாக நிலை பெற்றார். உழைப்பாளர்களின் உரிமைப் போரில் கே.சி.எஸ். எனும் மூன்றெழுத்து வாளும் கேடயமுமாக துணைநிற்கும்!

# கடவுளும் - மருத்துவரும் காக்க மறந்ததேன்?



உள்ளம் பதறாதோ – கடவுள்
உள்ளம் குமைந்து போகாதோ?
பிள்ளைக் கறி கேட்ட பெரும் பாவி
கிள்ளையை கீற வைத்தானோ?

மருத்துவனை கடவுள் என்ற
கற்பிதங்கள் இங்கு உண்டு!
மருத்துவனே மரணம் தந்தால்
மனம் ஒடுங்கிப் போகாதோ!

கால் கொண்டு ஆடிவந்த
அணங்கு அவளை – ஆடு
அறுத்தது போல்
அறுத்தெறிந்து விட்டானோ!
அடங்கா பழி கொண்டானோ!

ஆட்டம் இல்லை என்றால்
உயிர் எதற்கு என்று எண்ணி
ஆடும் பாவை அவள்
அடங்கித்தான் போனாளோ?

கனவை சுமந்த மகள்
கண்மூடி உறங்கி விட்டால்
அடங்கா அவள் கனவை
'அடக்கம்' யார் செய்வதினி?

மருத்துவனும் கடவுள் என்ற
மமதையை அழித்து விட்டாள்!
கண்ணில்லா கடவுள்தனை
காரி உமிழ்ந்து விட்டாள்!

– என்.எஸ்.பிரதாப் சந்திரன்



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 19.11.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# தனியார் துறையிலும் இடஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும்

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இரா.முத்தரசன் உரை




தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 12.11.2022ஆம் தேதி நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஆற்றிய உரை வருமாறு:

தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் பங்கேற்றுள்ள மாண்புமிகு அமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வணக்கம்.

பொருளாதாரத்தில் பின் தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு 10 சதவீதம் இட ஒதுக்கீடு தொடர்பாக மாண்பமை உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு 07.11.2022ஆம் தேதி வழங்கியுள்ள தீர்ப்பு சமூகநீதிக் கொள்கைக்கு எதிரானது. இதன் விளைவுகளை உணர்ந்து உடனடியாக அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை கூட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வரும் ஏணிப்படி முறையில் அமைந்த சாதிய அடுக்குமுறை சமூகத்தில், பெரும் பகுதி மக்களின் கல்வி மற்றும் பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டு வரும், வரலாற்று உண்மையை மறந்து விடமுடியாது. இந்த சமூக அநீதி களையப்பட்டு சமூக தளத்தில் அனைவருக்கும் சமூக நீதி வழங்கப்பட வேண்டும் என்ற போராட்டம் நூறாண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து வருகிறது.

கடந்த 1950 ஜனவரி 26–ல், நாம் ஏற்றுக் கொண்ட அரசியலமைப்புச் சட்டம், குடிமக்களுக்கு அரசியல் தளத்தில் சம உரிமை வழங்கியுள்ளது. சமூக, பொருளாதாரத் தளத்தில் நிலவி வரும் ஏற்றத் தாழ்வுகளையும், பாகுபாடுகளையும் களைந்து சமவாய்ப்பு வழங்க வேண்டும் என்று வழிகாட்டுகிறது. இதற்காகத் தான் இட ஒதுக்கீடு முறை நடைமுறைக்கு வந்தது. அரசியலமைப்புச் சட்டத்தின் இந்த அடிப்படையான உணர்வுகளை உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வு சரியாக பிரதிபலிக்கவில்லை என்பதே உண்மையாகும்.

நாட்டின் விடுதலைக்கு முன்பாக, காலனி ஆட்சி காலத்தில் சமூகத்தில் தீண்டாமை, சாதிய பாகுபாடுகள் நிலவி வந்த நிலையில், மிகச் சிறிய எண்ணிக்கையிலான உயர்சாதியினர் அனைத்து வாய்ப்புகளையும் பெற்று, சமூகத்தில் மேலாதிக்கம் செலுத்தி வருவதை சென்னை மாகாணத்தில் வாழ்ந்த சமூகநீதி உணர்வாளர்கள் உணர்ந்து, சமூக நீதிக்கான கோரிக்கைகளை முன்னெடுத்ததையும், அதில் வெற்றி பெற்றதையும் நாம் பெருமையுடன் நினைவு கூர்ந்து, அவர்கள் தொடங்கிய போராட்டம் இன்றும் முற்றும் பெறவில்லை என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

சமூகத்தின் உயர்தட்டில் முன்னேறிய, குறிப்பிட்ட ஒரு வகுப்பார் மட்டுமே அதிகார மையத்தில் நிறைந்து மேலாதிக்கம் செய்து வந்ததை எதிர்த்து, தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தொடங்கிய சமூக நீதிப் போராட்டம் 1921, செப்டம்பர் 16ல் முதல் வகுப்புவாரி இட ஒதுக்கீடு அரசாணை பெறுவதில் நிறைவு பெற்றது.

நாட்டின் விடுதலைக்குப் பின்னர், அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, முன்னேறிய சாதியினர் வகுப்புவாரி இட ஒதுக்கீடு கொள்கைக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தினர். இதன் காரணமாக தமிழ்நாட்டில் ஏற்பட்ட பேரெழுச்சியும், பெரும் கொந்தளிப்பும் அரசியலமைப்பு சட்டத்தை திருத்தி சமூக ரீதியாக, கல்விரீதியாக பின்தங்கியுள்ள சமூகப் பிரிவினருக்கு (இந்த உரிமைகள் மறுக்கப்பட்ட சாதிப்பிரிவினர்களுக்கு) இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பதை உறுதி செய்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக 1969 நவம்பர் மாதத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையிலான அரசு எஸ்.என்.சட்டநாதன் தலைமையில் பிற்படுத்தபட்டோர் ஆணையம் அமைத்தது. இந்த ஆணையத்தின் பரிந்துரைகள்படி இட ஒதுக்கீடு மேலும் விரிவடைந்தது.

தொடர்ந்து 1982ஆம் ஆண்டில் டாக்டர் எம்ஜிஆர் அவர்கள் தலைமையிலான அரசு ஜெ.ஏ.அம்பாசங்கர் தலைமையில் இரண்டாவது ஆணையம் அமைத்து அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வழிவகுத்தது. இந்த வரலாற்று தொடர்ச்சியில் தற்போது தமிழ்நாட்டில் 69 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கும் சமூகநீதி கொள்கை நடைமுறையில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் நூறாண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் சமூகநீதிப் போராட்ட அனுபவத்தையும், அதன் விளைவுகளையும், தேவைகளையும் மாண்பமை உச்சநீதிமன்றத்திற்கு முழுமையாக உணர்த்தப்பட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

கடந்த 07.11.2022ஆம் தேதி உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வு வழங்கிய தீர்ப்பு ஒன்றபட்ட, கருத்திணக்கம் கொண்ட தீர்ப்பல்ல. இதில் சில மாண்புமிகு நீதிபதிகள் இட ஒதுக்கீடு எவ்வளவு காலத்துக்கு நீடிக்க வேண்டும்? என கேள்வி எழுப்பியிருப்பதும், அது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பது உள்பட இட ஒதுக்கீட்டு கொள்கைக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டிருப்பது சமூகத்தில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

1978ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு அமைத்த மண்டல் கமிஷன் இட ஒதுக்கீடு வழங்கலுக்கான சமூகப் பிரிவுகளை அடையாளப்படுத்தும் போது, வருமான வாய்ப்புகளையும், பொருளாதார ஆதாரத்தையும் கருத்தில் கொண்டே நிர்ணயித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டால் வருமான வரம்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பின்தங்கிய நிலையை நிர்ணயிப்பது அரசியலமைப்பு சட்டத்திற்கு மாறானது, எதிரானது என்பது எளிதில் விளங்கும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சாதிய, வர்க்க வேறுபாடுகள் இல்லாத சமத்துவ சமூக அமைப்பை கட்டமைப்பதற்கு உறுதியுடன் போராடி வருகின்றது.

சாதி வாரியாக கணக்கெடுப்பு எதுவும் நடைபெறாத நிலையில், முன்னேறிய வகுப்பாரில் பின்தங்கியோர் என்று வகைப்படுத்துவது ஏற்றத்தக்கதல்ல. அதனை நிராகரிக்க வேண்டும். நவ தாராளமயக் கொள்கை நடைமுறையில் தனியார்துறை முன்னுரிமை பெற்று, கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு என எல்லா நிலைகளிலும் பன்னாட்டு நிதி மூலதன சக்திகள் மேலாதிக்கம் செலுத்தி வருகிறது. இச் சூழலில் இட ஒதுக்கீட்டு வழங்கலை தனியார் துறையிலும் அமலாக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இந்த கருத்துக்களின் அடிப்படையில் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வு வழங்கிய தீர்ப்பை எதிர்த்து, அரசியலமைப்பு முழு அமர்வு மன்றத்தின் மறுசீராய்வுக்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு பேசினார்.

### திருத்துறைப்பூண்டி கொருக்கை கண்ணன் மேடு பகுதியில்

# வீடு இழந்தவர்களை சந்தித்து எம்.செல்வராஜ் எம்.பி. நேரில் ஆறுதல்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் எம். செல்வராஜ் எம்.பி., திருத்துறைப்பூண்டி ஒன்றியம்,கொறுக்கை ஊராட்சி கண்ணன்மேடு கிராமத்தில் நீர் நிலைகளை ஆக்ரமித்து அரசு புறம்போக்கு இடத்தில் அனுமதியின்றி குடியிருப்புகள் கட்டியதாக 81 வீடுகளை நீதிமன்ற உத்தரவின்படி இடிக்கப்பட்டு, குடியிருக்க இடம் இல்லாமல் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அனைவரும் பள்ளி கூடங்களில் தற்காலிகமாக குடியிருக்க ஏற்பாடு செய்யப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

நாகை எம்.பி. எம்.செல்வராசு பாதிக்கப்பட்டு குடியிருக்க இடமின்றி தவிக்கும் தோழர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்ப நபர்களுக்கும் அரிசி, வேஷ்டி, புடவை, தலா ரூ.1000/= ரொக்கமாக வழங்கினார். தலைக்காடு கிராமத்தில் நடைப்பெற்ற இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் வை.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, கே.உலகநாதன் எக்ஸ்.எம்.ல்.ஏ., ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ. பாஸ்கர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் இரெ.ஞானமோகன், பி.வி.சந்திரராமன், எஸ்.தமயந்தி, கு.ராஜா, வி.ஜவகர், ஒன்றிய செயலாளர் டி.வி.காரல்மார்க்ஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆக்கிரமிப்பு வீடுகள் இடிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட 47 குடும்பத்திற்கு மட்டும் குடிமனைக்கான பட்டா வழங்கப்பட்டது. மற்ற நபர்களுக்கு உடனடியாக குடிமனை பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்தார்.



Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.